கமெண்ட் கந்தர்...

'சனிப்பெயர்ச்சி நடந்தபடியா அது நாட்டுக்கு கூடாதெண்டு சொல்லி தேர்தலை ஒத்திவைக்க ட்ரை பண்ணினாலும் பண்ணுவாங்கள்'



Follow us:

தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 151 சுபகிருது வருடம், தை மாதம் 05ஆம் திகதி வியாழக்கிழமை
(19.01.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஆகிர் - 26, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் அரசுக்கு எதிராக தெரிவித்து வரும் கருத்துகள் தொடர்பில் ஆராய்ந்த அரச மேல்மட்டம், அவர் பின்னால் மதத்தலைவர் ஒருவர் இருப்பதைக் கண்டறிந்துள்ளதாம்.

அந்த மதத்தலைவரின் வழிகாட்டலில் மேற்படி தலைவர் செயற்படுவதாக அரச மேல்மட்டத் தலைவர் ஒருவர் தனக்கு நெருக்கமான அமைச்சர்களிடம் கருத்து பரிமாறியுள்ளார்.

தேர்தலை ஒத்திவைக்க அரசு காய்நகர்த்தல்!

தேர்தல் செலவின ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் ஊடாக முயற்சியென எதிர்க்கட்சிகள் விசனம்

(நமது அரசியல் செய்தியாளர்)

தேர்தல் செலவின ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்தை இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பிலான தெரிவுக்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியினரின் எதிர்ப்பிற்கு மத்தியில், தேர்தல் செலவின ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்தை இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பிலான தெரிவுக்குழு கூட்டத்திற்கு முன்னதாக இந்த சட்டமூலம் தொடர்பில் சபாநாயகர் தலைமையில் விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம்...

02 பக்கம்

உரிய திகதியில் தேர்தல் நடத்தப்படும்!

தேர்தல் ஆணைக்குழு உயர்நீதிமன்றில் உறுதி

உள்ளூராட்சி மன்ற சட்ட திட்டங்களுக்கு அமைய, உரிய திகதியில் தேர்தல் நடத்தப்படுமென தேர்தல் ஆணைக்குழு, உயர் நீதிமன்றத்திற்கு நேற்று மீண்டும் உறுதியளித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், உயர் நீதிமன்றத்தில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இடைநிறுத்துவதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் இராணுவ கேர்ணல் ஆர்.விஜேசுந்தர தாக்கல் செய்த ரிட் மனுவை தள்ளுபடி செய்யுமாறு தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்திலேயே சட்டத்தரணி சாலிய பீரிஸ் இதனைக் கூறியுள்ளார்.

02 பக்கம்

அதிபர் ஆசிரியர்களுக்கான குருசெத கடனுக்கான வட்டி வீதம் அதிகரிப்பு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சபையில் சுட்டிக்காட்டு

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு வழங்கப்படும் குருசெத கடனுக்கான தவணைகளை செலுத்தும்போது 9.5 சதவீதமாக இருந்த வட்டியை 15.5 சதவீதம் வரை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இது ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி எனவும், இது தொடர்பில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

02 பக்கம்

உள்ளூராட்சித் தேர்தல் குறித்து சபையில் வாதப் பிரதிவாதங்கள்

02 பக்கம்

அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உடனடியாக மக்களுக்கு கிடைக்க வழிசெய்ய வேண்டுமெனக் கோரி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றும் பல் வைத்திய அதிகாரிகள் சங்கம் இணைந்து நேற்று (18) மன்னார் பொது வைத்தியசாலைக்கு முன்பாக அடையாள கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

(மன்னார் நகர் நிருபர்)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்;

டீ.ஐ.ஜி நிலந்த சார்பில் ஆஜராகப்போவதில்லை!

சட்டமா அதிபர் சார்பில் தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்துள்ள வழக்குகளில் முன்னாள் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன சார்பில் ஆஜராகப்போவதில்லையென சட்டமா அதிபர் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நேற்று (18) அறிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கும், பலத்த காயமடைந்தவர்களுக்கும் இழப்பீடு வழங்கக்கோரி பாதிக்கப்பட்ட 108 பேர் 108 வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்குகளில் முன்னாள் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியான...

02 பக்கம்

உக்ரைனில் ஹெலிகொப்டர் விபத்து;

உள்துறை அமைச்சர் உட்பட 18 பேர் பலி

10 பக்கம்

நிலுவைத் தொகையை மின்சாரசபை செலுத்தாவிடின் எரிபொருள் இல்லை!

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எச்சரிக்கை

மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 108 பில்லியன் ரூபா நிதி செலுத்த வேண்டியுள்ளது. நிலுவைத் தொகையை மின்சார சபை செலுத்தாவிட்டால் எரிபொருள் விநியோகத்தை முறையாக மேற்கொள்ள முடியாது. எனவே, இந்த பிரச்சினைக்கு உடனடித் தீர்வு வழங்கப்படாவிட்டால் இரு நிறுவனங்களும் மேலும் நெருக்கடியை சந்திக்குமென பெற்றோலிய கூட்டுத்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மின்சார சபை நிதியை முறையாக செலுத்தாமையினால் எரிபொருள் இறக்குமதிக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்தக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சுசந்த சில்வா தெரிவித்தார்.

எரிபொருள் இறக்குமதி தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்து நேற்று ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே இதைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதுவரையில் மின்சார சபை, பெற்றோலிக் கூட்டுத்தாபனத்துக்கு 108 பில்லியன் ரூபாவுக்கும் அதிகம் செலுத்தவேண்டியுள்ளது. அற்காக பெருந்தொகை வட்டியை வங்கிகளுக்கு...

02 பக்கம்

தேர்தல் செலவின ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் முற்போக்கான யோசனை

பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

நா.தினுஷா

தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்துதல் சட்டமூலம் முற்போக்கான யோசனையாகும். ஆனால், தற்போது இந்த சட்ட மூலத்தை நிறைவேற்றினால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான சட்டத்தை திருத்த வேண்டியேற்படும். ஆகவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்துவதிலும் தெளிவான பிரச்சினை உருவாகுமென்று 43ஆம் படையணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் செயற்பாடுகள் குறித்து விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாட்டில் நேற்று கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலுக்காக வேட்பாளர்கள் செய்யும் செலவைக் கட்டுப்படுத்தக்கூடிய சட்ட மூலத்தை...

02 பக்கம்

தேசியத் தலைவர் உருவாக்கிய கூட்டமைப்பை உடைத்த வரலாற்றுத் துரோகியாகிவிட்டீர்கள்!

இரா.சம்பந்தனுக்கு காட்டமான கடிதம் அனுப்பிய தவராசா

2009ஆம் ஆண்டு யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ்த் தேசிய அரசியலைச் சிதைக்க சில விசமிகள் கூட்டமைப்புக்குள் உள்நுழைந்தார்கள். திட்டமிட்டு பிரிவினையைத் தூண்டி அதை உங்களை வைத்தே அமுல்படுத்தினார்கள். இப்போது ஒப்பாரும் மிக்காருமில்லாத் தலைவரால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பையே சின்னாபின்னமாக்கி வரலாற்று துரோகத்திற்கு பாத்திரவாளியாகி விட்டீர்கள் என இரா.சம்பந்தனுக்கு சுட்டிக்காட்டியுள்ளார் இலங்கை தமிழ் அரசு கட்சியின் கொழும்புக் கிளை தலைவரும், மத்தியகுழு அரசியல்குழு உறுப்பினருமான கே.வி.தவராசா.

பல்வேறு விடயங்களை முன்வைத்து, இரா.சம்பந்தனுக்கு அனுப்பிவைத்துள்ள காட்டமான கடிதத்திலேயே இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

நீங்கள் தமிழ்த் தேசியத்தின்...

02 பக்கம்

அட்டைகளின் பற்றாக்குறை; விநியோகிப்பதில் சிக்கல்

ஆட்பதிவுத் திணைக்களம் விசேட அறிவிப்பு

தேசிய அடையாள அட்டைகளை அச்சிடுவதற்கு பயன்படுத்தப்படும் அட்டைகளின் பற்றாக்குறை காரணமாக 2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்தவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகளை வழங்குவது எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மேலும் பொதுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் சான்றளிக்கப்பட்ட ஆவணத்தை மாத்திரமே ஆட்பதிவுத் திணைக்களம் வழங்குமென அதன் ஆணையாளர் நாயகம்...

02 பக்கம்

ஏ9 வீதியில் வாகனம் மோதியதில் கரடி பலி

ஏ9 வீதியில் கொக்காவிலுக்கும் மாங்குளத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவில் வாகனம் மோதியதில் கரடி ஒன்று...

02 பக்கம்

உள்ளூராட்சித் தேர்தல் குறித்து சபையில் வாதப் பிரதிவாதங்கள்

(நா.தினுஷா)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்துவது குறித்து நேற்றும் சபையில் கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பித்த நிலையில், தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டமூலம் தொடர்பில் ஜனாதிபதி பங்கேற்புடனான விசேட கலந்துரையாடலொன்று இடம்பெறவுள்ளதாக சபாநாயகர் அறிவித்ததையடுத்து, இந்த சட்டமூலத்தினூடாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை காலந்தாழ்த்த அரசாங்கம் முயற்சிப்பதாக எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

சபாநாயகரின் அறிவிப்பையடுத்து சபையில் கருத்து வெளியிட்ட ஆளுங்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, “தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டமூலம் மீதான விவாதத்தை ஒரு மாதத்துக்கு காலந்தாழ்த்துவதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அறிவித்திருந்தார். அதன்பின்னர் ஜனாதிபதி தொலைபேசி அழைப்பெடுத்து ஏன் இந்த விவாதத்தை காலந்தாழ்த்தினீர்கள் என்று கேட்டுள்ளார். அதன் காரணமாகவே மீண்டும் அதுதொடர்பில் கலந்துரையாட முயற்சிக்கிறார்கள். இது ஏமாற்றுச் செயலாகும்.” என்று கூறினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, “அவ்வாறு ஜனாதிபதி எனக்கு எடுத்த அழைப்பை யார் ஒளிந்திருந்து செவிமடுத்தது? அமைச்சின் ஆலோசனைக் குழுவில் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தார்கள். இந்த சட்டமூலம் தொடர்பில் சந்தேகம் இருக்குமாக இருந்தால் அதுதொடர்பில் ஆணைக்குழுவிடம் விளக்கம் கோருமாறு கோரியிருந்தோம். தேர்தல் வேண்டுமென்று கோருகிறார்கள். அதன் பின்னர் எங்களின் பின்னால் வந்து நாங்கள் கூச்சலிட்டாலும் தேர்தலை காலந்தாழ்த்துமாறு கோருகிறார்கள். இதுவே உண்மைக் கதையாகும். இந்த இரட்டை வேட அரசியலை நிறுத்த வேண்டும். அவ்வாறு இதுகுறித்து தேர்தல் ஆணைக்குழு அச்சப்படுகிறதென்றால் ஒரு மாதத்துக்கு இந்த விவாதத்தை காலந்தாழ்த்துவதாக அறிவித்திருந்தேன். இந்நிலையில், இதற்கு அனுமதி வழங்கினால் எவ்வாறான பிரச்சினை ஏற்படும் என்பது குறித்து விரிவாக கலந்துரையாட ஜனாதிபதியும் பிரதமரும் தீர்மானித்தார்கள். கலந்துரையாடுவதற்கு என்ன தடையிருக்கிறது என்று புரியவில்லை” என்று கூறினார்.

அதனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,

“வரையறைகளைப் பிறப்பிப்பதனூடாக, மே மாதம் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு இடையூறு ஏற்படும் என்பது தெளிவாகத் தெரிகிறது. நாட்டில் புதிய சட்டமொன்று அனுமதி பெற்றுள்ளதால், இந்த புதிய சட்டத்திருத்தங்களின் பிரகாரமே உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்று நீதிமன்றத்தின் முன்னிலையில் கூறுவார்கள். அதன்பின்னர் புதிய சட்டத்தின் பிரகாரம் தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு நீதிமன்றமும் அறிவிக்கும்.

மக்களின் குரலை செவிமடுக்காமல் பலவந்தமாக இதுபோன்று சட்டங்களை உருவாக்கி தேர்தல் செயற்பாடுகளை இல்லாதொழிக்கவே அரசாங்கம் முயற்சிக்கின்றது. இது கூட்டுச் சூழ்ச்சியாகும். இது சர்வாதிகாரத்தின் சூழ்ச்சியாகும். எமது நாடு சர்வாதிகாரம் கொண்டதல்ல. இது ஜனநாயகத்தைப் பேணும் நாடாகும். அரசாங்கம் நாடாளுமன்றத்துக்குள் விளையாடினாலும் வீதிக்கிறங்கி மக்களுடன் நீதிக்காக போராடுவோம்” என்று தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க,

“நாடாளுமன்றத்தை அடிமைப்படுத்த இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது. இந்தத் தேர்தலை நடத்தப்போவதில்லை என்று ஜனாதிபதி தெளிவாகக் கூறுகிறார். தேர்தலை நடத்துவதா இல்லையா என்பது குறித்து தனிநபரொருவர் எவ்வாறு தீர்மானிப்பார்? அரசியலமைப்பு, நாடாளுமன்றம், அமைச்சரவை என அனைத்தையும் அடிமைப்படுத்தி அவற்றின் சட்டத்திட்டங்களை மீறி ஜனாதிபதி சர்வாதிகாரமாக செயற்படும் நிலை தற்போது நிலவுகிறது” - என்றார்.

யாழ்ப்பாணத்திலிருந்து மரக்கறி வகைகளை ஏற்றிக்கொண்டு வடமராட்சி நோக்கி சென்றுகொண்டிருந்த படி ரக வாகனம் ஒன்று, திடீரென தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது. நேற்றுக் காலை 8 மணியளவில் வல்லை பகுதியில் குறித்த சம்பவம் இடம்பெற்றது. தீ விபத்து தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

23 முதல் 27 வரை நாட்டின் மருத்துவமனைகள் கறுப்பு எதிர்ப்பு வாரமாக அனுஷ்டிக்க அறிவிப்பு

மருத்துவ அதிகாரிகள் சங்கம்

நாட்டில் தற்போது நிலவும் மருந்து தட்டுப்பாடு, அநீதியான வரி திருத்தம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்குமாறு வலியுறுத்தி எதிர்வரும் 23ஆம் திகதிமுதல் 27ஆம் திகதிவரை நாடு தழுவிய ரீதியிலுள்ள சகல மருத்துவமனைகளின் பங்கேற்புடன் கறுப்பு எதிர்ப்பு வாரமாக அறிவிக்க ஏகமனதாக தீர்மானிக்கப் பட்டுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

இதுதொடர்பில் அந்த சங்கத்தின் மத்திய செயற்குழுவின் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலின் முடிவில் இந்த முடிவு எடுக்கப் பட்டதாகவும் அந்தச் சங்கம் அறிவித்தது.

ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ள மருத்துவ அதிகாரிகள் சங்கம், அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

மருந்து தட்டுப்பாட்டுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொடுக்குமாறு வலியுறுத்தி ஜனாதிபதிக்கு கையளிக்கவுள்ள மக்கள் மனுவில் கையொப்பம் பெறும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சுதந்திர சுகாதார சேவை சந்தித்துள்ள நெருக்கடி நிலைமை, சுகாதாரத் துறை நெருக்கடிக்குள்ளாவுவதற்கு இருக்கும் எச்சரிக்கை நிலைமை என்பன தொடர்பில் சமயத் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்களை தெளிவுபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சகல தொழிற்சங்கங்களின் பொது இணக்கப்பாட்டுடன் ‘தொழில் நிபுணர்களின் தொழிற் சங்கம்’ என்ற பெயரில் பரந்துபட்ட கூட்டணியை உருவாக்குவதற்கும், மருத்துவ அதிகாரிகள் சங்கம் அதிலொரு பங்காளராக செயற்படவும் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அநீதியான வரித் திருத்தங்களுக்கு எதிராக சகல செயற்பாடுகளையும் இந்தப் புதிய கூட்டணியுடன் இணைந்து முன்னெடுக்கவுள்ளதுடன், நாளைய தினம் (20) கொழும்பில் சகல தொழிற்சங்கங்களுடனும் இணைந்து பொது எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

10 இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் யாழில் கைது

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரிடம் 10 இலட்சம் ரூபா பணத்தை இலஞ்சமாக பெற்றுக்கொண்ட யாழ் சிறப்பு குற்ற விசாரணைப் பிரிவில் கடமையாற்றும் தமிழ் பொலிஸ் உத்தியோகஸ்தரை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணைப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

காணி ஒன்றுக்கான போலி காணி உறுதியை தயாரித்ததாகக் கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய நபருக்கு எதிராக வழக்கில் அவருக்கு சாதகமாக உதவிசெய்வதாகக் கூறி, பொலிஸ் உத்தியோகத்தர் இந்த இலஞ்சத்தை கேட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்த வழக்கின் காணி உரிமையாளராக கருதப்படும் நபர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய யாழ்ப்பாணம் சந்தைக்கு அருகில் இலஞ்ச பணத்தைப் பெற்றுக்கொண்டபோது பொலிஸ் உத்தியோகஸ்தரை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணைப் பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தின் முறைப்பாட்டாளர் யாழ்ப்பாணம் மானிப்பாய் பிரதேசத்தை சேர்ந்தவர் என பொலிஸார் கூறியுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த உள்ளதாக இலஞ்ச ஆணைக்குழுவின் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

தேர்தலை ஒத்திவைக்க...

நேற்று நடைபெற்றது.

இதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டிருந்தார்.

இந்தச் சட்டமூலம் இன்று நிறைவேற்றப் பட்டால் தேர்தல்கள் ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பான ஒழுங்குமுறைகளை தயாரிக்க வேண்டும் என எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டமூலம் உள்ளூராட்சித் தேர்தலை தடுப்பதற்காக கொண்டுவரப்பட்ட துருப்புச் சீட்டு என்றும், இது தொடர்பில் முன்னர் அறிவிக்கப்பட்டபோது அவ்வாறான சட்டமூலத்தைக் கொண்டுவருவதற்கு எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் கிரியெல்ல தெரிவித்தார்.

தேர்தலை பிற்போடுவது நாட்டில் ஆபத்தான சூழ்நிலையை உருவாக்கலாம் என லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்தார்.

கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல, தேசிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க உட்பட எதிர்க்கட்சிகளின் அரசியல் தலைவர்கள் பலர் இந்த சட்டமூலத்தை இந்த நேரத்தில் கொண்டுவருவதற்கு தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு விவாதம் இன்று காலை 10.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெறும்

அதிபர், ஆசிரியர்களுக்கான...

என்றாலும், கடனுக்கான வட்டி விகிதம் 2023 ஜனவரியிலிருந்து 15.5 சதவீதமாக ஒரே தடவையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், கடன் வரம்பைக்கூட தாண்டியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது சுட்டிக்காட்டினார்.

பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் போன்ற கல்வித்துறையில் ஈடுபடும் நபர்களுக்கு மக்கள் வங்கியினூடாக 9.5 வீத வட்டியில் குருசெத வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளதோடு, 2021ஆம் ஆண்டின் மக்கள் வங்கியின் வருடாந்த அறிக்கையின் பிரகாரம் 2 இலட்சத்து 75 ஆயிரம் வாடிக்கையாளர்களுக்கு இந்தக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

நிலுவைத் தொகையை...

செலுத்தி வருகிறோம். நாங்களும் கடனுக்கே எரிபொருள் இறக்குமதி செய்கிறோம்.

மின் உற்பத்திக்குத் தேவைப்படும் எரிபொருளில் பெருந்தொகை எரிபொருள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினாலேயே விநியோகிக்கப்படுகின்றது. இந்த எரிபொருள் தொகையையும் உற்பத்தி நிலையங்கள் தொழிற்பட்டால் மாத்திரமே ஓரளவு இலாபத்துக்கு விநியோகிக்க முடியும். மின் உற்பத்தி நிலையங்களை தொடர்ந்து இயக்க வேண்டுமெனில் அதற்குத் தேவையான மசகு எண்ணெயை பெற்றுக்கொள்ள வேண்டும்.

பெருமளவு எரிபொருளை கடனுக்கு வழங்கி, அதற்கான நிதி முறையாக எங்களுக்கு கிடைக்கவில்லை என்றால் மின் உற்பத்தி நிலையங்களை இயக்குவதில் பிரச்சினை ஏற்படும். அதற்கு காரணம் மசகு எண்ணெயை இறக்குமதி செய்ய எம்மிடம் நிதி இல்லை.

நாங்கள் ஒருபோதும் மின்சார சபைக்கு நெப்தா எண்ணெயை அதிக விலைக்கு பெற்றுக்கொடுக்கவில்லை. மின்சார சபைக்கு விநியோகிக்கும் விலையை விட, இறக்குமதி செய்ய அதிக தொகை பணம் செலுத்துகிறோம்.

வர்த்தக அடிப்படையில் சிந்தித்தால், செலுத்த வேண்டிய நிதி முறையாக கிடைக்கவிட்டால், எரிபொருள் விநியோகத்தை முறையாக வழங்க முடிடியாத நிலை ஏற்படும். இருந்தபோதும், எதிர்காலத்தில் உயர்தரப் பரீட்சை இடம்பெறவிருக்கிறது. இந்த காலப்பகுதியில் மாணவர்களின் நலன்கருதி மின் விநியோகத்தை தொடர்ச்சியாக வழங்க நேரிடும். எனவே, மின்சார சபை அதற்கு உதவி வழங்குமென்றால் அதற்கான ஒத்துழைப்பை நாங்களும் பெற்றுக்கொடுப்போம்.

நாட்டின் தேவை, பொருளாதார தேவையை மறுத்துவிட்டு எங்களால் செயற்பட முடியாது. அதற்குக் காரணம் இது அரசுக்குச் சொந்தமான கூட்டுத்தாபனம். அதேபோன்று, ஏதாவதொரு முறையில் எங்களுக்கு சேரவேண்டிய நிதியை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதை மின்சார சபையும் அறிந்திருக்க வேண்டும்.

இதுதொடர்பில் தீர்க்கமான முடிவொன்று எடுக்காவிட்டால் இந்த இரு நிறுவனங்களும் நெருக்கடியை சந்திக்கும் - என்றார்.

உயிர்த்த ஞாயிறு...

பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்.

இந்த 108 நஷ்டஈடு கோரும் வழக்குகள் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இவ்வாறு அறிவிக்கப்பட்டது.

உரிய திகதியில்...

பாராளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்டோரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அனைத்து தரப்பினரும் முன்வைத்த கருத்துகளை பரிசீலித்த பிரியந்த ஜயவர்தன, எஸ்.துரைராஜா மற்றும் பி.பத்மன் சூரசேன ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம், மனுக்களை எதிர்வரும் 10ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானித்துள்ளது.

தேர்தல் செலவின...

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளது. இது முற்போக்கான சட்டமூலமாகும். அதிக தொகை பணத்தை செலவுசெய்து தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்கும்போது அதிகளவான வாக்குகளும் கிடைக்கின்றன. ஆனால், உண்மையாக செயலாற்றக்கூடிய, நேர்மையானவர்கள் வாக்குப்பட்டியலில் பின்னடைவை சந்திக்கிறார்கள். அவ்வாறு இல்லாவிட்டால் தோல்வியை சந்திக்கிறார்கள்.

தேர்தலுக்காக வேட்பாளர்கள செலவு செய்யும் செலவினத்தைக் கட்டுப்படுத்தும் நடைமுறைகள் இந்தியாவிலும் கடுமையாக உபயோகிக்கப்படுகின்றன. எனவே, இந்த யோசனை எமது நாட்டுக்கும் முற்போக்கானதொரு தீர்மானமாக அமையும்.

அரச மற்றும் தனியார் ஊடகங்களினூடாக ஒருசில வேட்பாளர்கள் செய்யும் செலவுகளை கட்டுப்படுத்துவதற்கு இது மிக முக்கியமாக அமையும். இந்தச் சட்டம் பாராளுமன்றத்தில் அனுமதிப்பெற்றாலும் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல்கள் என்பன இடம்பெறுகின்றபோது செலவுகளை எவ்வாறு முன்னெடுப்பது என்ற பிரச்சினை கட்டாயம் உருவாகும்.

அதற்கமைய, இந்த சட்டமூலத்திலுள்ள உள்ளடக்கத்தின் பிரகாரம் இந்த சட்டமூலத்துக்கு அனுமதி கிடைத்தால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியாமல் போகும். இதுவே இதிலுள்ள பிரச்சினையாகும். இந்தச் சட்டமூலத்தை ஒரு மாத காலத்துக்கு காலந்தாழ்த்த தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதும் இன்று (நேற்று) அந்த தீர்மானத்தில் மாற்றம் ஏற்பட்டிருந்தது. ஒருவேளை இன்று அந்த சட்டமூலத்துக்கு அனுமதி கிடைக்குமாக இருந்தால், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தை இந்தச் சட்டத்துக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கும் பிரச்சினை ஏற்படும். ஆகவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது குறித்து தெளிவான பிரச்சினை தோற்றம்பெறும் - என்றார்.

ஏ9 வீதியில்...

உயிரிழந்துள்ளது.

இந்தப் பகுதியில் விலங்குகள் நடமாடுவதாக வீதியில் பதாகைகள் வைக்கப்பட்டிருந்த நிலையில், இரவுநேரங்களில் வாகன ஓட்டிகள் அதிவேகமாக வாகனம் ஓட்டியதால் இந்த விபத்து நடந்தது.

அட்டைகளின்...

பிரதீப் சபுதந்திரி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வழங்கப்பட்ட ஆவணம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வரை செல்லுபடியாகும் என ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, தேசிய அடையாள அட்டைகளை அச்சிடுவதற்கு பயன்படுத்தப்படும் அட்டைகளுக்கு தற்போது நிலவும் தட்டுப்பாடு நீக்கப்படும் வரை தேசிய அடையாள அட்டை விநியோகம் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

தேசியத் தலைவர்...

அரசியல் இருப்புக்கு சாவுமணியடிப்பீர்கள் என்பது பலருக்கும் அப்போது தெரிந்திருந்தது. ஆனாலும் உங்களில் மாற்றம் வரும் என்று நம்பிக்கையோடு மக்களும் காத்திருந்தார்கள்; விசுவாசிகளான நாமும் காத்திருந்தோம். ஆனால், மஹிந்த நாட்டை காப்பாற்றியதனாலேயே திருகோணமலைக்கு சுதந்திரமாக சென்று வரமுடிகின்றது என பாராட்டியதுடன், 2020ஆம் ஆண்டு தேர்தல் முடிந்த பின்னர் நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தில் பிரதேசவாதத்தை கக்கியதுடன், தேசியத் தலைவர் மஹிந்த என பாராளுமன்றத்தில் நீங்கள் புகழாரமும் சூட்டினீர்கள் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் விபரம் வருமாறு-

கையறுநிலையின் கடைசிக் கட்டத்தில் இந்தக் கடிதத்தை உங்களுக்கு எழுதவேண்டிய சூழலை நீங்களே உருவாக்கியிருக்கிறீர்கள். போர் முடிவுற்ற பின்னர் தமிழ் மக்களுக்கு இருந்த ஒரேயொரு கலங்கரைவிளக்கம் கூட்டமைப்பு மட்டுமே.

தமிழினத்தின் விடுதலையை இலக்காகக் கொண்டுதான் ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பலம் பொருந்திய ஓர் இயக்கமாக புலிகள் நிலைபெற்ற காலத்தில் தமிழரின் அரசியல் இருப்பை உறுதிப்படுத்தவே அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் இணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. பலம் பொருந்திய அரசியல் இருப்பை தங்களின் தலைமையில் கூட்டமைப்பு நிரூபித்துக் காட்டியுமிருந்தது.

தமிழரின் அரசியல் இணைப்பும் ஒற்றுமையும் ஒரே கொள்கைக்கான அணியாகவும் மக்களின் அங்கீகாரமாகவும் 2010ஆம் ஆண்டுத் தேர்தல் வரை ஒவ்வொரு தேர்தல் முடிவும் வலுவானதொரு செய்தியை பெரும்பான்மை அரசியல் தலைமைகளுக்குச் சொல்லிக்கொண்டே இருந்தன. ஆனால், சில ஒட்டகங்கள் கூட்டமைப்பெனும் கூடாரத்துக்குள் நுழைந்ததோடு, கூட்டமைப்பு தேய்ந்துகொண்டே சென்று 2023இல் அமாவாசையாகி எல்லாம் முடிந்துவிட்டது போன்று தோன்றுகின்றது.

கம்பீரமாகத் தமிழரின் அரசியல் இருப்பைக் கர்ஜனையோடு வெளிப்படுத்திய கூட்டமைப்பு இப்போது இல்லை. கூட்டமைப்பின் இந்த நிலைக்கு நீங்களும் பிரதான காரணகர்த்தாவாகிவிட்டீர்கள். வரலாற்றின் வசைச்சொல்லுக்கு இலக்காகிவிட்டீர்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு என்று தலைப்பிட்டு மிக மிக உருக்கமான வேண்டுகோளை கடந்த காலங்களில் பகிரங்கமாக ஊடகங்களில் வெளியிட்டதோடு உங்களுக்கும் அனுப்பிவைத்திருந்தேன். எதை நீங்கள் செய்யக்கூடாது என்று உங்களிடம் அந்தக் கடிதங்கள் வாயிலாக கெஞ்சுதலாக வேண்டியிருந்தேனோ அவை அனைத்தையும் இப்போது செய்து முடித்துவிட்டு தன்னந்தனியாக இருக்கின்றீர்கள்.

2009ஆம் ஆண்டு யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ்த் தேசிய அரசியலைச் சிதைக்க சில விஷமிகள் கூட்டமைப்புக்குள் உள்நுழைந்தார்கள். திட்டமிட்டு பிரிவினையைத் தூண்டி அதை உங்களை வைத்தே அமுல்படுத்தினார்கள். கடைசியில் தமிழரசுக் கட்சியைத் தவிர, இப்போது ஒரு கட்சியும் இல்லாத நிலையில் தனிக்கட்சி கூட்டமைப்பாகாது என்பதை நீங்கள் அறிவீர்களா? கூட்டமைப்பு இல்லாமல் அதன் தலைவர் என்ற பதவியும் பறிபோய், வெறும் பாராளுமன்ற உறுப்பினராக நீங்கள் நிற்பதைக் காண மனம் சகிக்கவில்லை.

கூட்டமைப்பில் இருந்த நம்பிக்கை சிதையக் காரணமானவர்களைக் கொஞ்சம் கண்டுகொள்ளாமல் பொறுப்பற்ற தலைமையாக நீங்கள் நடந்துகொண்டபோதே பொறுப்புள்ள தமிழ்த் தேசியவாதிகள் இதைச் சுட்டிக்காட்டினார்கள். ஆனால் நீங்கள் எதையும் பொருட்படுத்தவில்லை.

தமிழர் அரசியலின் இறுதி நம்பிக்கையாகவும் ஒளியாகவும் திகழ்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டும் பல்வேறு காரணங்களைச் சொல்லி வெளியேறிய அனைவரையும் மக்கள் அரசியல் அநாதைகளாக்கிய வரலாறு முன்பிருந்தது. ஆனால், அது உங்கள் காலத்தில் சிதைவுற்று இறுதியில் கூட்டமைப்பு இருந்தாலும் ஒன்று இல்லாவிட்டாலும் ஒன்று என்ற நிலைக்கு மக்களைக் கொண்டு வந்துவிட்டது.

நீங்கள் தமிழ்த் தேசியத்தின் அரசியல் இருப்புக்கு சாவுமணியடிப்பீர்கள் என்பது பலருக்கும் அப்போது தெரிந்திருந்தது. ஆனாலும் உங்களில் மாற்றம் வரும் என்று நம்பிக்கையோடு மக்களும் காத்திருந்தார்கள்; விசுவாசிகளான நாமும் காத்திருந்தோம். ஆனால், மஹிந்த நாட்டை காப்பாற்றியதனாலேயே திருகோணமலைக்கு சுதந்திரமாக சென்று வரமுடிகின்றது என பாராட்டியதுடன், 2020ஆம் ஆண்டு தேர்தல் முடிந்த பின்னர் நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தில் பிரதேசவாதத்தை கக்கியதுடன் தேசியத் தலைவர் மஹிந்த என பாராளுமன்றத்தில் நீங்கள் புகழாரமும் சூட்டினீர்கள். இப்போது ஒப்பாரும் மிக்காருமில்லாத் தலைவரால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பையே சின்னாபின்னமாக்கி வரலாற்றுத் துரோகத்திற்கு பாத்திரவாளியாகி விட்டீர்கள்.

இனிமேல் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று நீங்கள் எந்த முகத்தோடு போய் ரணிலுடன் பேச்சு நடத்தமுடியும்? கூட்டமைப்பு இருக்கும் வரையே உங்களுக்கும் மரியாதை மக்களிடையே மட்டுமல்ல, அரசியல் தலைவர்களிடமும் இருந்தது. ஆனால், கூட்டமைப்பே இல்லையென்றான பின்னர், அற்ற குளத்து அறுநீர்ப்பறவையாக அவையெல்லாமே பறந்தோடிப் போய்விட்டதை ஏன் இன்னும் உணராதிருக்கிறீர்கள் என்பது ஆச்சரியமே.

ஒருகாலத்தில் எங்கள் இனத்தின் ஆளுமை மிக்க அரசியல் தலைவர் என்ற விம்பம் உங்களுக்கு எம்மிடையே இருந்தது. அதை நீங்களே உடைத்துவிட்டீர்கள். காலம் உங்கள் கடைசிச் செயலையே கணக்கில் எடுக்கும். அதனால் எப்போதைக்கும் கூட்டமைப்பைச் சிதைத்தவர் சம்பந்தர் என்ற தீராப்பழியை நீங்கள் சுமப்பதைக் காண எம்மாலும் சகிக்கமுடியாதுதான். ஆனாலும் அதுவே விதி.

‘சேராத இடம் சேர்ந்து’ வஞ்சத்தில் வீழ்ந்தீரே சம்பந்தரே என்று உங்களுக்காக அனுதாபப்பட மட்டுமே எம்மால் முடியும் - என்றுள்ளது.

தினசரி பலாபலன்கள்

சுபகிருது வருடம் தை மாதம்
05ஆம் நாள் வியாழக்கிழமை

மேஷம் புதிய தொழில் வியாபாரங்களை ஆரம்பித்தால் சிக்கல் உண்டு, செலவு செய்யும்போது சிந்தித்துச் செய்யுங்கள்.

ரிஷபம் வாகனங்களால் அதிக சுகமும் இலாபமும் உண்டு, புகழ் செல்வாக்கு சிறப்பாக அமையும்.

மிதுனம் எதிரிகள் உங்களிடம் பணிந்து நடந்துகொள்வார்கள், தற்காலிக தொழில் வியாபாரத்தில் நல்ல இலாபம்.

கடகம் சரியான முடிவுகளை எடுக்க முடியாது திண்டாடுவீர்கள், அதிர்ஷ்டத்தை சோதித்துப் பார்க்காதீர்கள்.

சிம்மம் வாகனங்களில் தூர பயணங்களை ஒத்திவைப்பது நல்லது, அனைத்தும் மந்தகதியில் இயங்கும்.

கன்னி முயற்சிகள் அனைத்தும் பழிக்கும் நாள், நினைத்த காரியத்தை முடித்தே தீருவீர்கள்.

துலாம் உங்கள் மதிப்பையும் கௌரவத்தையும் நீங்களே கெடுத்துக்கொள்வீர்கள், வீண்பேச்சு வேண்டாம்.

விருச்சகம் நீங்கள் விரும்பிய உணவு, படுக்கை அமையும், முக மலர்ச்சியுடன் சுறுசுறுப்பாக காணப்படுவீர்கள்.

தனுசு ஆணவத்தால் அவமானமடைய வேண்டி வரும், பணத்தின் பெருமையை அறியும் நாள்.

மகரம் புதிய நண்பர்கள் தொடர்பால் புதிய உறவினை ஏற்படுத்திக்கொள்வீர்கள், தேவைக்கேற்ப பணம் கிடைக்கும்.

கும்பம் உங்கள் கீழ் உள்ளவர்களை நம்பி எதையும் செய்யலாம், குடும்பத்தில் மகிழ்ச்சியான காரியங்கள் நடைபெறும்.

மீனம் தந்தையின் சொத்துகளை பாதுகாத்துக்கொள்ளுங்கள், தர்ம சிந்தனையுடன் செயலாற்றுங்கள்.

திதி:	துவாதசி பி.ப. 1.18 வரை பின் திரயோதசி
நட்சத்திரம்:	கேட்டை பி.ப. 3.18 வரை பின் மூலம்
யோகம்:	மரண யோகம் (சுப காரிய நன்மை இல்லை)
வார சூலை:	தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
நல்ல நேரம்:	மு.ப.11.33 - 12.33 மணி வரை
ராகு காலம்:	2.03 - 3.33 மணி வரை
எமகண்டம் :	6.33 - 8.03 மணி வரை
குளிகை :	9.33 - 11.03 மணி வரை
சந்திராஷ்டமம்:	மேஷ ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
விசேட தினம்:	பிரதோஷ விரதம்

கணிப்பு : சிவா பாஸ்கரராவ்
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை நேற்று செலுத்தியது.

காலை 11 மணியளவில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலுள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் சட்டத்தரணி ந.காண்டீபன் தலைமையிலான குழு கட்டுப்பணத்தை செலுத்தியது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சகல சபைகளுக்கும் போட்டியிடவுள்ளதாக சட்டத்தரணி ந.காண்டீபன் தெரிவித்தார்.

ராஜபக்ஷக்களுக்கு எதிரான கனடாவின் நடவடிக்கையை உலகின் ஏனைய அரசாங்கங்களும் பின்பற்ற வேண்டும்!

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவிப்பு

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் இருவர், ஒரு முன்னாள் இராணுவச் சிப்பாய் மற்றும் கடற்படை அதிகாரி மீது தடை விதித்து கனடா மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை ஏனைய அரசாங்கங்களும் பின்பற்ற வேண்டும் - என மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளைப் பாதுகாக்க ஒரு நாடு எடுத்த சக்திவாய்ந்த முடிவு இது என்று தெரிவித்துள்ள மீனாட்சி கங்குலி, உலகின் மற்ற பெரிய நாடுகளும் இதேபோன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்

1983 முதல் 2009 வரை இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் (LTTE) இடையே நடந்த உள்நாட்டுப் போரின்போது செய்யப்பட்ட "மொத்த மற்றும் முறையான மனித உரிமை மீறல்களில்" அனைவரும் சம்பந்தப்பட்டவர்கள் என்று அவர் கூறுகிறார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கனேடிய வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி, கனடா "சர்வதேச சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிரான சர்வதேச தண்டனையின்மையை முடிவுக்குக் கொண்டுவர உறுதியான நடவடிக்கை எடுத்துள்ளது" என்றார். இதில் பயணத் தடைகள் மற்றும் சொத்து முடக்கம் ஆகியவை அடங்கும்.

மஹிந்த ராஜபக்ஷ 2005-2015 வரை ஜனாதிபதியாக இருந்தார், உள்நாட்டுப் போரின் இறுதி மாதங்கள் உட்பட இலங்கை இராணுவப் படைகள் ஏராளமான போர்க்குற்றங்களை இழைத்துள்ளன. மருத்துவமனைகள் மீது இராணுவம் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியதுடன், ஆயிரக்கணக்கான பொதுமக்களைக் கொன்று காயப்படுத்தியது. பல போராளிகள் மற்றும் பொதுமக்கள் வலுக்கட்டாயமாக காணாமல் போயுள்ளனர். ஐக்கிய நாடுகள் சபை, ஊடகங்கள், மனித உரிமைகள் கண்காணிப்பகம், பிற குழுக்கள் அரசாங்கப் படைகள் மற்றும் விடுதலைப் புலிகளின் விரிவான போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தியுள்ளன.

கோட்டாபய ராஜபக்ஷ போரின் இறுதிக் காலத்தில் பாதுகாப்புச் செயலாளராக இருந்தார். போர்க்குற்றங்களைத் தவிர, ஊடகவியலாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களின் கடத்தல் மற்றும் கொலை செய்ததில் தொடர்புடையவராக கருதப்படுகிறார் . அவர் 2019 இல் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். பொருளாதாரத்தை அவர் தவறாகக் கையாண்டதால் தூண்டப்பட்ட வெகுஜன எதிர்ப்புகள் அவரை ஜூலை 2022இல் இராஜினாமா செய்யவைத்தன.

உள்நாட்டுப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட 'மொத்த மற்றும் முறையான மனித உரிமை மீறல்களில்' சம்பந்தப்பட்டவர்கள் என்ற அடிப்படையில், முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இரண்டு முன்னாள் இராணுவத்தினருக்கு எதிராக கனேடிய அரசாங்கம் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்றுவரும் உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறல் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை விடுத்த கோரிக்கைகள் நீண்டகாலமாக கவனிக்கப்படாமலேயே இருந்துவருகின்றன. மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஆணையர்,



"மொத்த மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களில் நம்பகத்தன்மையுடன் குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக மேலும் இலக்கு வைக்கப்பட்ட தடைகளை ஆராயுமாறு" அரசாங்கங்களை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

கனடாவின் பொருளாதாரத் தடைகள் முக்கியமானவை, ஏனெனில், முதல் முறையாக – அவை குற்றங்கள் செய்யப்பட்டபோது ஒட்டுமொத்த கட்டளையில் இருந்தவர்களை குறிவைக்கின்றன. இதை மற்ற அரசுகளும் பின்பற்ற வேண்டும்.

பாரதூரமான குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களை அவர்களின் தலைமைப் பாத்திரம் எதுவாக இருந்தாலும் அவர்களைக் கணக்குப் போட்டு நீதியை உறுதிப்படுத்துவதற்கான முதன்மைப் பொறுப்பு இலங்கை அரசாங்கத்திடம் உள்ளது.

கொட்டகலை தமிழ் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா

(எஸ்.கணேசன்)

நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் ஆர்.சிவலிங்கம் தலைமையில் நேற்று புதன்கிழமை 18ஆம் திகதி கொட்டகலை வூட்டன் ஹில்ஸ் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ்விழாவில் பிரதம அதிதியாக நுவரெலியா வலய கல்வி பணிப்பாளர் டீ.எம்.பி.லசந்த அபேரட்ண மற்றும் சிறப்பு அதிதிகளாக மேலதிக மற்றும் கோட்ட கல்வி பணிப்பாளர்கள், விசேட அதிதிகளாக கல்வியற் கல்லூரியின் பீடாதிபதிகள், பிரதேச பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் சங்கம், பெற்றோர்கள் சங்கம் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மாணவர்களின் கலாசார நிகழ்வு கள் இடம்பெற்றதுடன், கடந்த ஆண்டுகளில் தேசிய ரீதியில் நடைபெற்ற பரீட்சைகளில் அதிசிறந்த சித்திகளைப் பெற்ற மாணவர்களுக்கும் மற்றும் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் பதக்கங்களும், சான்றிதழ்களும் அதிதிகளால் வழங்கப்பட்டன.

இதன்போது பிரதம அதிதியாக கலந்துகொண்ட நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் ஏனைய அதிதிகளின் சேவைகளைப் பாராட்டி பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களால் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

ஸ்ரீ ரங்கா உள்ளிட்ட கால்பந்து சம்மேளனத்தின் புதிய நிர்வாகத்தினருக்கு இடைக்காலத் தடை

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் புதிய தலைவர் ஜே. ஸ்ரீ ரங்கா உட்பட புதிய நிர்வாகக் குழாமுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (18) இடைக்கால தடை விதித்துள்ளது.

இந்த உத்தரவு இன்றுவரை அமுலில் இருக்கும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் ஜஸ்வர் உமர் தாக்கல் செய்த முறைப்பாடு தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த இடைக்கால தடையுத்தரவை வழங்கியுள்ளது. கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை முன்னாள் தலைவர் ஜஸ்வர் உமருக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க மறுத்திருந்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தனக்கு தலைவர் பதவிக்கு வாய்ப்பு வழங்காமல் பாரிய அநீதி இழைத்ததாக நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜஸ்வர் உமர் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

கடல் வழியாக கடத்தி வரப்பட்ட 1266 கிலோ ஏலக்காயுடன் கற்பிட்டியில் இருவர் கைது

கடல் மார்க்கமாக இலங்கைக்கு கடத்திவரப்பட்ட 15 மில்லியன் ரூபா பெறுமதியான 1266 கிலோ ஏலக்காயுடன் இருவர் கற்பிட்டி எத்தலே பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை கடற்படையினர் புத்தளம் விசேட அதிரடிப்படையினருக்கு வழங்கிய தகவலின்படி, சந்தேகநபர்களையும் கைது செய்ததுடன், 1266 கிலோ கிராம் ஏலக்காயையும் மீட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் கல்பிட்டி எத்தலே பகுதியைச் சேர்ந்த 33 மற்றும் 40 வயதுடையவர்கள் என்பதுடன், அவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக நைகந்த சுங்க அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கொட்டாஞ்சேனையில் நேற்று துப்பாக்கிச்சூடு

ஒருவர் படுகாயம்

கொட்டாஞ்சேனை 6ஆவது ஒழுங்கை பகுதியில் நேற்று (18) பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் காரில் பயணித்தபோது, மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இருவர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூட்டில் குறித்த நபருக்கு வாய் பகுதியிலும் வயிற்றிலும் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே அமெரிக்க தூதுவர் ஜூலி சங் உள்ளிட்ட குழுவினர் திருகோணமலையிலுள்ள இந்தியன் ஒயில் நிறுவனத்துக்குச் சொந்தமான எண்ணெய்க் குதங்களை நேற்று பார்வையிட்டனர். ஐஓசி நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

வெற்றி நிச்சயம்

"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னை தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, திறமையிருந்தும் வாழ்க்கையில் முன்னேற முடியாமை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, எதிரித்தொல்லை, தீராதநோய், போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, வெளிநாடுசெல்ல, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, கொடுத்த பணம் திரும்பி வர, படிப்பில் மந்தம், விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 48 மணித்தியாலங்களுக்குள் 100% நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொடுப்பேன் என்று உத்தரவாதம் அளிக்கிறேன்.

உலகப் புகழ்பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி.
e b a j b . ஸ்ரீமத் சுவாமிஜி–0710192687
h t hh

வாகனங்கள் விற்பனைக்கு விலைமனுக்கோரல்

வாகன இலக்கம்	செசி இலக்கம்	தயாரிப்பு வகை	
38 - 0XXX	KR11V020039	MOTOR VAN	TOYOTA TOWNACE
41 - 0XXX	WU90-0001284	MOTOR LORRY	TOYOTA DYNA
40 - 7XXX	TLD54-0134441	MOTOR LORRY	ISUZU ELF CLOSED
SP-LH - 1XXX	MAT445051AZR07652	MOTOR LORRY	TATA ACE
NW-DAA- 9XXX	MAT445235FZR20750	MOTOR LORRY	TATA ACE EX2

- வாகனம் பரிசோதனை செய்தல் : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- வாகனம் பரிசோதனை செய்யும் கால எல்லை : 2023 ஜனவரி 19, 20ஆம் திகதிகளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை. ஜனவரி 21ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மட்டும்.
- டெண்டர் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி : 2023 ஜனவரி 21ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை.
- டெண்டர் பத்திரத்தின் விலை : ரூபா.250/- (மீளப்பெற முடியாது)
- டெண்டர் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- டெண்டர் பெட்டி வைக்கப்பட்டுள்ள, டெண்டர் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.

டெண்டர் பத்திரங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கையளிக்க முடியும். தபால் மூலம் அனுப்பும் டெண்டர் பத்திர கடித உறையின் முன் பக்க இடது புற மேல் மூலையில் "வாகன விற்பனை" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேற் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் தற்போதுள்ள நிலையில் பெற்றுக்கொடுப்பதுடன், டெண்டர் கோருவதற்கு முன் அகற்றும் உரிமை நிறுவன வசமானதாகும்.

முகாமையாளர்,
கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.
வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
தொலைபேசி இல. 0112 000 000
COMMERCIAL CREDIT

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஜனவரி 19ஆம் திகதி, வியாழக்கிழமை

அரசியல் தலைமையின் உறுதியே தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும்!

1978ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜயவர்தன அரசாங்கம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய அரசியல் யாப்பே இலங்கையில் இப்போதும் நடைமுறையில் அதிகாரபூர்வமாக இருக்கும் அரசியல் யாப்பாகும். அது பல திருத்தங்களை பின்னர் நிறைவேற்றியது. 1987ஆம் ஆண்டு ஏற்பட்ட இந்திய – இலங்கை சமாதான உடன்பாட்டைத் தொடர்ந்து 13ஆவது தடவையாக அரசியல் யாப்புத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன் மூலமே இலங்கையில் மாகாண சபைகள் என்னும் அமைப்புகள் உருவாக்கப்பட்டன. அதன் பிரகாரமே மாகாண சபைகளுக்கான அதிகாரப் பரவலாக்கல் என்னென்ன விடயங்களில் எந்தெந்த அளவில் இருக்கும் என்பவை போன்ற விடயங்களும் அரசியல் யாப்பு ரீதியில் சட்டபூர்வமாக ஆக்கப்பட்டன.

அரசியல் மற்றும் இராஜதந்திர அழுத்தங்களைத் திசை திருப்புவதற்காக மேலெழுந்தவாரியாக 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுவோம் என்று வாக்குறுதி அளிப்பதிலோ அல்லது 13ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று வாக்குவேட்டைக்காக தேர்தல் கோஷம் போடுவதிலோ அதன் அர்த்தத்தைக் காணமுடியாது. அதேபோல் 13ஆவது திருத்தத்தைக் கண்ணை மூடிக் கொண்டு அது புறக்கணிக்கப்பட வேண்டிய ஒன்று சொல்வதும் தவறாகும். 13ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படக் கூடாது என சிங்களப் பேரினவாத சக்திகள் கூச்சல் போடுவதிருந்தே 13ஆவது திருத்தத்தில் பல நல்ல விடயங்கள் இருக்கின்றன என்பதை பொது அறிவுடைய எவரும் புரிந்து கொள்ளலாம்.

கடந்த 35 வருடங்களாக நாட்டின் மீயுயர் சட்டமான அரசமைப்பில் இருக்கின்ற ஏற்பாடுகளை பேரினவாத சிந்தனை ஒன்றின் அடிப்படையில் மட்டுமே நடைமுறைப்படுத்த மறுக்கும் இலங்கை ஆட்சி பீடம், அந்தச் சட்டத்தின் மூலம் தமிழர்களுக்கு நீதி செய்யும் என்று நம்புவது நடக்கின்ற காரியமல்ல.

13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என இப்போதுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவிக்கின்றார். ஆனால், அதை இதுவரை நடைமுறைப்படுத்தாமல் இருந்தமை, நடைமுறைப்படுத்த மறுத்தமை நாட்டின் அரசமைப்பை மீறும் செயலாகும் என்று கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடப் பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் சுட்டிக் காட்டுகின்றார்.

நாட்டின் அரசமைப்பில் இருக்கும் சட்ட ஏற்பாடுகளை மூன்றரை தசாப்த காலம் நடைமுறைப்படுத்தாமல் அடம்பிடித்தமை மட்டுமல்ல, அதை இப்போது செய்ய முற்படுவது ஏதோ தமிழினத்திற்கும் சிறுபான்மையினருக்கும் தான் செய்ய விழையும் சகாயம் என்பது போல் காட்ட முயற்சிக்கின்றார்கள் ஜனாதிபதி உட்பட்ட ஆட்சித் தரப்பினர்.

அதை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்த பின்பும், அதைச் செய்வதற்கு ஓரிரண்டு வருடங்கள் பிடிக்கும் என்றும் கூட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் கோடி காட்டியிருக்கின்றார்.

அரசமைப்பில் இருக்கின்ற அதிகாரப் பரவல் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் கடப்பாடு இருந்தும், அதனைச் செய்ய மறுத்து, அரசமைப்பு சட்ட மீறலாகப் பெரும் அகங்காரத்துடன் நடந்து கொள்ளும் தென்னிலங்கை ஆட்சி பீடங்கள், சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுத் திட்டத்திற்கு இணங்கி வருவார்கள் என்று நம்புவது முட்டாள்தனமாகும்.

அரசமைப்பில் இருக்கின்ற ஏற்பாடுகளையே நடைமுறைப்படுத்த மறுக்கும் பேரினவாத மேலாண்மை திமிர்த்தனம் கொண்டவர்கள், அதிகாரப்பகிர்வு செய்யப்பட்ட விடயங்களை மீளப் பெற முடியாது என்ற சமஷ்டிக் கோட்பாட்டிலான தீர்வுக்கு இணங்குவார்கள் என நாம் தமிழர்கள் கனவு காண்பதும் முட்டாள்தனம்தான்.

அரசமைப்புச் சட்டத்தில் இருப்பவற்றை நடைமுறைப்படுத்த ஓரிரண்டு வருடங்கள் கோரும் ஆட்சித் தலைமையினால் இனி இணக்கம் காணக்கூடிய தீர்வைக் கூட நடைமுறைப்படுத்த முடியுமா, அதற்கு எத்தனை தசாப்தங்கள் தேவை என்ற கேள்விகள் எல்லாம் உள்ளன.

தீர்க்கமாக முடிவெடுத்து, திடமான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய திராணிமிக்க அரசியல் தலைமைத்துவம் நாட்டுக்குக் கிட்டாதவரை நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய நியாயத் தீர்வு ஒன்றை எட்டுவது சாத்தியமல்ல.

இலங்கையில் 1200 இந்திய படையினர் இறந்தனர்;

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு!

நாட்டில் நடந்த போரில் அனைத்து பிரதேசங்களை சேர்ந்தவர்களும் பாதிக்கப்பட்டனர் எனவும் ஒரு சமூகத்தையோ, ஒரு பிரதேசத்தை சேர்ந்தவர்கள் மாத்திரம் அதில் பாதிக்கப்படவில்லை எனவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறந்த நோக்கத்துடன் புனர்வாழ்வு தொடர்பான சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது. குறுகிய நோக்கத்துடன் இது சம்பந்தமாக அர்த்தப்படுத்துவது பொருத்தமற்றது. போரில் 26 ஆயிரம் படையினர் இறந்தனர். புலிகளின் உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர்.

நாட்டில் நடந்த பிரிவினைவாதப் போர் காரணமாக ஒரு சமூகத்தை சேர்ந்தவர்களோ, ஒரு பகுதியை சேர்ந்தவர்களோ பாதிக்கப்படவில்லை. நாட்டைப் பாதுகாக்க 26 ஆயிரம் படையினர் உயிர்களைத் தியாகம் செய்தனர்.

விடுதலைப் புலிகளுடனான போரில் ஆயிரத்து 200 இந்திய படையினர் மரணித்தினர். அனைத்து இனங்களையும் சேர்ந்த பலர் இறந்தனர். விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர்.

இவை அனைத்துக்கும் பின்னர் 2009ஆம் ஆண்டு இந்த போர் முடிவுக்கு வந்த பின்னர், தவறாக வழிநடத்தப்பட்டு விடுதலைப் புலிகளுடன் இணைந்திருந்த 12 ஆயிரத்து 194 இளைஞர்கள் அரச படைகளிடம் சரணடைந்தனர். அவர்கள் சரணடைந்த பின்னர், அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, வழக்குகளை தீர்க்க முயற்சித்திருந்தால் என்ன நடந்திருக்கும்?

நீண்டகாலம் வழக்கு விசாரணைகள் தொடர்ந்தும் நடந்துகொண்டிருக்கும். சில வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 20 ஆண்டுகளுக்கு மேலாக வழக்குடன் தொடர்புடையவர்கள் சிறையில் இருக்கின்றனர்.

இதனால், குறுகிய வழியை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அப்போது இருந்தவர்கள் அனைவரும் இணைந்து, மிகப் பெரிய வேலைத்திட்டத்தை முன்னெடுத்து, அவர்களுக்கு புனர்வாழ்வு பயிற்சிகளை வழங்கி சமூகத்துடன் இணைத்தனர்.

அவர்கள் சமூகத்துடன் இணைக்கப்பட்டதன் காரணமாகவே அவர்கள் வெளியில் வந்து தமது வேலைகளை செய்ய முடிந்துள்ளது. கடந்த வருடம் நான் நீதியமைச்சராக இருந்தபோது வடக்கிற்கு சென்றேன்.

அப்போது சுமார் 200 இளைஞர்களை சந்திக்க முடிந்தது. அவர்கள் அனைவரும் தொழில்களை செய்து, நன்றாக வாழ்ந்து வருகின்றனர். பொருளாதார ரீதியாக உதவுமாறே அவர்கள் கோருகின்றனர்.

அந்த இளைஞர்களை சிறையில் அடைத்து வழக்கு தாக்கல் செய்திருந்தால், அவர்களுக்கு எதிரான வழக்குகள் தற்போதும் நிலுவையில் இருந்திருக்கும். அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள். அவர்களுக்கு வெளிநாடுகளுக்கும் செல்ல முடியாது. தொழிலையும் செய்ய முடியாமல் போயிருக்கும்.

அரசாங்கத்தினாலும் செலவுகளை சமாளிக்க முடியாமல் போயிருக்கும். அதேபோல் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருட்கள் தொடர்பில் எமக்கு பாரிய பிரச்சினை இருக்கின்றது. இளைஞர்களுக்கு குற்றங்களுடன் தொடர்பு இருந்தால், சாட்சியங்கள் இருக்குமாயின் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டும். அடிப்படைவாத ரீதியில் ஒரு கொள்கையைக் கொண்டிருப்பார்கள் என்ற காரணத்தினால் தினமும் நீதிமன்றத்திற்கு வரவழைத்து வழக்குகளைத் தொடுத்துக் கொண்டிருக்க முடியுமா?

அதற்கு சட்டத்திலும் இடமில்லை. அடிப்படைவாத கொள்கைகளை கொண்டுள்ளவர்களை புனர்வாழ்வு பயிற்சிகளுக்குட்படுத்தி, சமூகமயப்படுத்த வேண்டும். எவ்வளவு காலத்திற்கு வழக்குகளை நடத்துவது? இலங்கையில் வழக்கு ஒன்று விசாரித்து முடிய எவ்வளவு காலம் செல்லும் என்பதும் நாம் அறிவோம்.

ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருட்களுக்கு அடிமையான அதிகளவானோர் இருக்கின்றனர். அவர்களை பிரித்து அடையாளம் காணவேண்டும். இவர்களுக்கு மேலே சர்வதேச ரீதியில் தொடர்புகள் இருக்கும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இருக்கின்றனர்.

அவர்களுக்குக் கீழே நாடு முழுவதும் விநியோகிக்கும் வலையமைப்பை சேர்ந்த சுமார் 500 பேர் இருக்கின்றனர். போதைப்பொருளுக்கு அடிமையான சுமார் ஒரு இலட்சம் பேர் இருக்கின்றனர்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை விரட்டி செல்வதில் பயனில்லை. அவர்களை சிறையில் அடைத்துப் பயனில்லை. அவர்களுக்கு புனர்வாழ்வு பயிற்சிகளும் சிகிச்சைகளும் வழங்கப்படவேண்டும்.

நெத்தலி மீன்களை துரத்திச் சென்று பிடித்து சிறையில் அடைத்து சிறைச்சாலைகளை நாம் நிரப்பி வருகின்றோம். இவர்களுக்கு எதிரான வழக்குகள் தினமும் விசாரிக்கப்படுகிறன. சுறா மீன்களான போதைப்பொருட்கள் கடத்தல்காரர்களின் வழக்குகளை விசாரிக்க நேரமில்லை. அவர்கள் தப்பிச் சென்று விடுகின்றனர் எனவும் அமைச்சர் அலி சப்ரி மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்து ஒன்றியம், பச்சிலைப்பள்ளி வர்த்தக சங்கம் மற்றும் இலங்கை இராணுவத்தின் 552ஆவது காலாட்படை பிரிவு (இயக்கச்சி) ஆகியவற்றின் ஒருங்கிணைப்பில், பளை நகரத்தில் கடந்த திங்கட்கிழமை (16) இடம்பெற்ற வடமாகாணத்தின் மாபெரும் பட்டிப்பொங்கல் நிகழ்வின்போது 150 மாணவர்களுக்கு கற்றல் பொதிகளும் 150 பயனாளிகளுக்கு தென்னம்பிள்ளைகளும் நிவாரணப் பொதிகளும் வழங்கிவைக்கப்பட்டன.

கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட இந்துக் கல்லூரியின் வகுப்பறைக் கட்டடத் திறப்பு விழா

(இக்பால் அலி)

கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தினால் சுமார் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கண்டி இந்துக் கல்லூரியின் வகுப்பறைக் கட்டடத் திறப்பு விழாவும் தைப்பொங்கல் உற்சவமும் பாடசாலை அதிபர் பி.சிவகுமார் தலைமையிலும் தமிழ் வர்த்தக சங்கத் தலைவர் ஆர். அன்பழகன் மற்றும் தமிழ் வர்த்தக சங்க ஸ்தாபகத் தலைவர் ஏ.தட்சணாமூர்த்தி ஆகியோரின் வழிகாட்டலுடனும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வி.வேலுகுமார், கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னக்கோன், கண்டி கல்வி வலயப் பணிப்பாளர் இனூகா சாமரி அந்தரகே, மத்திய மாகாண சபையின் முன்னாள் தலைவர் துரை மதியுகராஜா, கோட்டக் கல்விப் பணிப்பாளர் தமிழ்ச்செல்வன், உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ்.ரமேஸ்பாபு, கண்டி கல்வி வலய உதவிப் பணிப்பாளர் , அமீன் மற்றும் தமிழ் வர்த்தகப் பிரமுகர்களான முருகமலை ஆலயச் செயலாளர் பெ.பழனியப்பன், இந்து இளைஞர் மன்றத் தலைவர் பி.வைத்தீஸ்வரன், நாவலப்பிட்டி ஸ்ரீ கதிர்வேலாயுத அறங்காவலர் முத்தையாப்பிள்ளை ஸ்ரீகாந்த், தொழிலதிபர் ஏ. சிவசுப்பிரமணியம், தமிழ் வர்த்தக சங்கத்தின் செயலாளர் எஸ்.பரமேஸ்வரன், பொருளாளர் எஸ்.ஏ.சால்ஸ் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் பெற்றோர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது விசேட அம்சமாக தமிழ் வர்த்தக சங்கத்தின் பொருளாளர் எஸ்.ஏ.சால்ஸ் கணினி தொழில்நுட்ப ஆய்வுகூடத்திற்கு 10 இலட்சம் ரூபா தருவதாக உறுதிமொழி வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

கண்டி ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் விசேட தைப்பொங்கல் பூஜை வழிபாடுகள் இடம்பெற்று, பின்பு கோயிலில் இருந்து பிரமுகர்கள் ஊர்வலமாக பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டு பாடசாலைக் கட்டடத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்து மாணவர்களின் பயன்பாட்டுக்காகக் கையளித்தனர்.

இன்றைய நாளில்..

- 1818 – பிரெஞ்சு இயற்பியலாளர் அகஸ்டின் பிரெனெல் முனைவுற்ற ஒளியைப் பற்றிய விளக்கத்தை அறிவித்தார்.
- 1867 – இலங்கையில் பால்க்னர் என்பவரைக் கொன்ற குற்றத்திற்காக கல்யாண் கங்காணி என்பவர் தூக்கிலிடப்பட்டார்.
- 1883 – முதலாவது மேலே செல்லும் கம்பி வலையமைப்புக் கொண்ட மின்னொளி அமைப்பு எடிசனால் நியூ ஜெர்சியில் அமைக்கப்பட்டது.
- 1966 – இந்திரா காந்தி இந்தியாவின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1993 – வேதி ஆயுத உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டது.
- 2006 – புளூட்டோவுக்கான முதலாவது நியூ ஹரைசன்ஸ் என்ற விண்ணுளவியை நாசா விண்ணுக்கு ஏவியது.
- 2007 – மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வாகரையைத் தாம் கைப்பற்றிவிட்டதாக இலங்கை இராணுவம் அறிவித்தது.

நக்கல் நமசிவாயம்

பார்லிமெண்ட் தேர்தலுக்குக் கூட இந்தளவு பரபரப்பு இருந்ததில்லை பாருங்கோ..!



பேருவளை மருதானை தாருஸ் ஸஹ்ரா மகளிர் அரபுக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா

(பேருவளை பீ.எம்.முக்தார்)

பேருவளை மருதானை தாருஸ் ஸஹ்ரா மகளிர் அரபுக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா சீனன்கோட்டை அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலை எஸ்.எம்.ஜாபீர் ஹாஜியார் மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை (16) சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரி ஸ்தாபக உறுப்பினர் மௌலவி பஸ்லான் ஜுஸுலி (அல்-அஷ்ரபி பீ.ஏ.), கலாபீட தலைமை நிர்வாகி சங்கைக்குரிய மௌலவி ஸக்கி அஹமத் ஆலிம் (அல்-அஷ்ரபி எம்.ஏ.) ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் 26 பேர் ஆலிமாக்களாக பட்டம் பெற்று வெளியேறினர்.

மாத்தறை மின்னதுல் பாஸிய் அரபுக் கல்லூரி முதல்வர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.எஸ்.எம்.இஸ்திகார் (பாரி) பட்டமளிப்பு பேருரை நிகழ்த்தினார்.

பட்டம் பெற்ற மாணவி அல்-ஆலிமா ரைஸா ரியாஸ்தீன் (ஸஹ்ரவிய்யா) வரவேற்புரை நிகழ்த்தியதோடு, பட்டம் பெற்ற மற்றொரு ஆலிமாவான ஸஹ்ரா மன்சூர் (ஸஹ்ரவிய்யா) மத்ரஸா வரலாற்றை எடுத்துரைத்தார்.

மேலும், பட்டம் பெற்ற ஆலிமாக்களான நப்லா நவாஸ் (ஸஹ்ரவிய்யா) 'இம்மை மறுமையின் விளைநிலம்' எனும் தலைப்பிலும் பாத்திமா பாரூக் (ஸஹ்ரவிய்யா) ஸலிஹான 'பெண்' என்ற தலைப்பிலும் உரையாற்றியதோடு, ஸபிய்யா இஸ்மாயில் (ஸஹ்ரவிய்யா) நற்சிந்தனை வழங்கினார். அதிபர் ஹுமைஸரா ஹஸன் (பீ.ஏ.) உட்பட பலரும் இந்நிகழ்வில் உரையாற்றினர்.

அத்தோடு, இஸ்லாமிய கீதம், கவிதை, நாடகம் போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கெச்சிமலை அல்-அஷ்ரபியா அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி ஏ.ஆர்.எம்.ஸில்மி (நூரி-அல் அஸ்ஹரி எம்.ஏ.) துஆ பிரார்த்தனை செய்தார்.

சீனன்கோட்டை பாஸிய்யா பள்ளிவாசல் பிரதம இமாம் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.ஐ.எம்.ரபீக் (பஹ்ஜி,) வெலிகாமம் ரிபாயிய்யா மகளிர் அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் (ரவ்லி), உப அதிபர் மௌலவி எம்.அஸ்மிகான் (முஅய்யிதி), அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை நிறைவேற்றுக்குழு உறுப்பினர் அஷ்ஷெக் இஹ்ஸானுதீன் அபுல் ஹஸன் (நளீமி), முஸ்லிம் விவாகப் பதிவாளர் மௌலவி எம்.எஸ்.எம்.பாஸில் (அஷ்ரபி) மற்றும் மௌலவிகளான எம்.பாரூக் (மக்கி), ஏ.டபிள்யூ.எம்.பஹ்ருதீன் (மிஸ்பாஹி), பேருவளை நகர பிதா மஸாஹிம் முஹம்மத், சீனன்கோட்டை பள்ளிச்சங்க உப தலைவர் சட்டத்தரணி எம்.ஸி.எம்.ஹம்ஸா உட்பட உலமாக்கள், பிரமுகர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். இதன்போது விசேட நினைவு மலரொன்றும் வெளியீட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்களை உள்வாங்கக் கோரி கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்துக்கு முன்பாக போராட்டம்

(எஸ்.கணேசன்)

கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்துக்கு (தேசிய பாடசாலை) தமது தோட்டத்தில் உள்ள தரம் ஆறுக்கு மேல் கல்வி பயிலும் மாணவர்களையும் உள்வாங்குமாறு வலியுறுத்தி, கொட்டகலை டிரேட்டன் தோட்டத் தொழிலாளர்கள், கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்துக்கு முன்பாக நேற்று (18.01.2023) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் சுமார் 2500 மாணவர்கள் வரை கல்வி பயில்கின்ற போதிலும், தமது தோட்ட மாணவர்கள் உள்வாங்கப்படுவதில்லை என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

எமது தோட்டத்திற்கு அருகாமையில் உள்ள பாடசாலை கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம் என்பதால் எமது மாணவர்களை உள்வாங்குமாறு கோருகின்றோம் எனவும் பெற்றோர் குறிப்பிட்டனர்.

இப்போராட்டத்தையடுத்து பாடசாலையில் முத்தரப்பு சந்திப்பொன்று இடம்பெற்றது. நுவரெலியா வலயக் கல்வி அதிகாரிகள், கொட்டகலை தமிழ் மகா வித்தியாலய பாடசாலை அதிபர், முகாமைத்துவ குழு மற்றும் போராட்டத்தில் ஈடுபட்டோர் இச்சந்திப்பில் பங்கேற்றனர்.

காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை பொங்கல்விழா நேற்றுக் கொண்டாடப்பட்டது.

தமிழரசுக் கட்சி பச்சிலைப்பள்ளி - கரைச்சி பிரதேச சபைகளுக்கு வேட்புமனுத் தாக்கல்

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வகையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் நேற்று (18) பிற்பகல் கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேச சபைகளில் கரைச்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய இரு சபைகளுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பாக கிளிநொச்சி - கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்குமான கட்டுப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

அதனையடுத்து நேற்று இரு பிரதேச சபைகளுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளையின் செயலாளர் வீரபாகு விஜயகுமார், பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் கட்சியின் செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள் எனப்பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

18.01.2023 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

நாணயம்	கொள்வனவு வீதம்	விற்பனை வீதம்
அவுஸ்திரேலியன் டொலர்	14 0846	150 4558
கனேடியன் டொலர்	156 3581	168 2 85
சீன யுவான் (ரென்மின்பி)	41 0315	44 3881
யூரோ	275 4808	3 1 0734
ஜப்பான் யென்	1 6324	1 7508
சிங்கப்பூர் டொலர்	16 6248	171 15
ஸ்ரேலிங் பவுன்	33 4660	346 0116
சுவிஸ் பிரான்ங்	276 0350	3 4 6444
ஐ.அ.டொலர்	25 30 1	260 3670

நாடு	நாணயம்	விற்பனை வீதம்
பஹ்ரைன்	பஹ்ரைன் தினார்	85 6740
குவைட்	குவைட் தினார்	0,075 3551
ஓமான்	ஓமான் றியால்	83 7231
கட்டார்	கட்டார் றியால்	88 20 4
சவூதி அரேபியா	சவூதி அரேபிய றியால்	85 3383
ஐக்கிய அரபு இராச்சியம்	ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம்	87 5086

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் நூற்றாண்டு விழா

அஷ்ஷேக் எம்.ஐ.றிஸ்வி முப்தியின் தலைமையில் இன்று இடம்பெறும்

(அஷ்ரப் ஏ.சமத்)

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் நூற்றாண்டு விழா இன்று வியாழக்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரை உலமா சபைத் தலைவர் மௌலவி அஷ்ஷேக் எம்.ஐ.றிஸ்வி முப்தியின் தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகின்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், கௌரவ அதிதியாக பிரதம மந்திரி தினேஷ் குணவர்தனவும், பிரதம பேச்சாளராக தென்னாபிரிக்க உலமா சபை தலைவர் மௌலானா இப்றாஹீம் பாஹ்மும் கலந்துகொள்ளவுள்ளனர். நூற்றாண்டை முன்னிட்டு விசேட முத்திரை வெளியிடப்படவுள்ளதோடு, முதல் முத்திரையை ஜனாதிபதி வெளியீட்டு வைப்பார்.

நூற்றாண்டு விழா நிகழ்வின் அப்துல் ஹாலிக் மௌலவி வரவேற்புரை நிகழ்த்த, உலமா சபையின் எதிர்காலத் திட்டங்கள் பற்றி உலமா சபை பொதுச் செயலாளர் அர்ஹம் நுராமித் மௌலவி உரையாற்றவிருப்பதோடு, உலமா சபைத் தலைவர் எம்.ஐ.றிஸ்வி முப்தியின் உரையும் இடம்பெறவுள்ளது. ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரும் உரையாற்றவுள்ள அதேவேளை, தென்னாபிரிக்க உலமா சபையின் செயலாளர் மௌலானா இப்றாஹீம் பாஹ்ம் சிறப்புரையாற்றுவார்.

அத்துடன் உப தலைவர் அஹார் முஹம்மத் தலைமையில் நூற்றாண்டு மலர் வெளியிட்டு வைக்கப்படும். கலாநிதி முபாரக் மதனி தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளதோடு, பிரார்த்தனையை அஷ்ஷேக் உமாதீன் மௌலவி நிகழ்த்துவார்

இந்நிகழ்வில் டி.எஸ்.சேனநாயக்க மற்றும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி மாணவர்கள் தேசிய கீதம் இசைப்பார்கள். இதன்போது வெலிகம தனவீர் அகடமியின் கஸீதாவும் இடம்பெறவுள்ளது.

மேல்மாகாண முன்னாள் அமைச்சர் யூசுப் காலமானார்

(அஷ்ரப் ஏ.சமத் - பி.எம்.முக்தார்)

மேல்மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் ஏ.எம்.யூசுப் (வயது 76) களுத்துறையில் காலமானார். அன்னாரது ஜனாஸா நேற்று (18) களுத்துறை ஜும்ஆப் பள்ளிவாசலில் அசர் தொழுகையின் பின்னர் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவர் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு 1988ஆம் ஆண்டு காலத்தில் இருந்து களுத்துறை - பேருவளை பிரதேச மூவின மக்களது ஆதரவையும் பெற்று ஐ.தே.கவின் மாகாணசபை உறுப்பினராக 25 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் மாகாண சபையில் முதலாவது முஸ்லிம் அமைச்சர் என்பதும் குறிப்பிடத்தக்கது .

சர்வமதத் தலைவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் பெருமளவிலான தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஜனாஸா நல்லடக்கத்தில் கலந்துகொண்டனர்.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் வைரவிழா நிகழ்வு

(சாவகச்சேரி நிருபர்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் வைரவிழா நிகழ்வுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (22) காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை இரு அமர்வுகளாக சாவகச்சேரி பூமாரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள காலை அமர்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.ஸ்ரீ சற்குணராஜாவும் பி.ப. 2.30 மணிக்கு சைவப்புலவர் சங்கத்தின் உப தலைவர் சி.ஞானசூரியம் தலைமையில் இடம்பெறவுள்ள மாலை நேர அமர்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

காலை மற்றும் மாலை நேர அமர்வுகளின்போது வைரவிழாவை முன்னிட்டு சைவசமயப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களது கலை நிகழ்வுகள், வைரவிழா சைவசமய திறன் விருத்திப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் ஆகிய நிகழ்வுகளுடன் 'சைவநாதம்' மலர் வெளியீட்டு நிகழ்வும் - சைவப் புலவர் பட்டமளிப்பு விழாவும் சிறப்பு நிகழ்வுகளாக இடம்பெறவுள்ளன.

இதன்போது சைவப்புலவர்கள் தேர்வில் சித்தியடைந்த சைவப்புலவர்கள் 15 பேருக்கும் இளஞ்சைவப்புலவர்கள் 28 பேருக்கும் பட்டமளிப்பு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.01.17
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5003
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,448,470.00
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 1 4 3 9 8 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3245
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 71,794,221.60
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 02 25 40 58

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1458
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,448,072.40
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 1 1 1 8 5 4

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1033
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 142,577,368.40
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 11 22 54 72

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 312
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,511,407.20
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 07 20 43 59
விசேட இலக்கினம் கன்னி

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1351
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 293,687,998.00
ஆங்கில எழுத்து M
சுப்பர் இலக்கம் 15
வெற்றி இலக்கங்கள் 28 61 73 78
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நுவரெலியா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை நேற்றுமுன்தினம் (17) செலுத்தியது. நேற்று பி.ப. 2 மணியளவில் நுவரெலியா மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் அக்கட்சியின் நுவரெலியா மாவட்ட ஆசன அமைப்பாளர் சதானந்தன் திருமுருகன் மற்றும் கட்சி உறுப்பினர்கள் உள்ளடங்கிய குழு கட்டுப்பணத்தை செலுத்தியது.

நுவரெலியா மாவட்டத்தின் நுவரெலியா மாநகர சபை மற்றும் நுவரெலியா பிரதேச சபை உள்ளிட்ட 11 சபைகளுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கை சின்னத்தில் போட்டியிடவுள்ள நிலையில் 11 சபைகளுக்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டதாக அக்கட்சியின் ஆசன அமைப்பாளர் சதானந்தன் திருமுருகன் தெரிவித்தார்.

தலவாக்கலை தீ விபத்து - இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் பார்வையிட்டு நடவடிக்கை

(எஸ்.கணேசன்)

தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தலவாக்கலை மிடில்டன் தோட்டத்தில் கடந்த 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு ஏற்பட்ட தீ விபத்தில் 07 வீடுகள் முற்றாகவும், 05 வீடுகள் பகுதியளவிலும் எரிந்து நாசமாகியுள்ள நிலையில் தீ விபத்து இடம்பெற்ற பகுதிக்கு நேற்று முன்தினம் (17) செவ்வாய்க்கிழமை பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான அரவிந்தகுமார் நேரில் சென்று பார்வையிட்டார். அவருடன் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளும் சென்றிருந்தனர்.

இந்தத் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்துரையாடிய அமைச்சர் அவர்களது தேவைகள் குறித்த முழு விபரங்களையும் கேட்டறிந்து கொண்டார். இந்தத் தீ விபத்தில் தங்களது வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், உடுதுணிகள் மற்றும் பாடப் புத்தகங்கள் உள்ளிட்ட பொருட்கள் தீக்கிரையாகியுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து இந்தத் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு அவரின் ஊடாக பெற்றுக் கொடுக்க இராஜாங்க அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

குறித்த வீடுகளில் இருந்த 49 பேர் தற்காலிகமாக உறவினர்கள் வீடுகளிலும், தமிழ் மகா வித்தியாலயத்திலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தீவிபத்துக்கான காரணம் இதுவரை உறுதி செய்யப்படாதபோதிலும்,

மின் கசிவின் காரணமாக தீ ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நுவரெலியா - தலவாக்கலை வீதியில் இ.போ.ச. பஸ்கள் திடீர் நிறுத்தம் - மாணவர்கள் அவதி

(நுவரெலியா மேலதிக நிருபர்)

நுவரெலியா - தலவாக்கலை பிரதான வீதியிலிருந்து நாவலர் தமிழ் மகா வித்தியாலயம், பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரி, காமினி தேசிய பாடசாலை, நல்லாயன் மகளிர் கல்லூரி போன்ற அரச மற்றும் தனியார் பாடசாலைகளுக்கு செல்லும் பஸ்கள் உரிய நேரத்திற்கு சேவையில் ஈடுபடாமையினால் மாணவர்களும் தொழில்துறைக்குச் செல்வோரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதியில் தினமும் சேவையில் இருந்த மூன்றுக்கும் மேற்பட்ட இ.போ.ச. பஸ்கள் திடீரென நிறுத்தப்பட்டுள்ளமையால் நூற்றுக்கணக்கான மாணவர்கள், அன்றாட தொழிலுக்குச் செல்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக கிலாரண்டன், டெஸ்போட், கிரிமிட்டி, வாழைமலை, அவோக்கா, கார்லிபேக் ஆகிய பிரதேசங்களின் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களுமே இவ்வாறு தொடர்ந்து அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

தலவாக்கலையில் இருந்து நுவரெலியா நோக்கி டெஸ்போட், கிரிமிட்டி வழியாக காலையில் செல்லும் பஸ்ஸில் பயணிகள் முழுமையாக நிரம்பி விடுவதால் அதில் பயணம் செய்ய இயலாத நிலை ஏற்படுவதாகவும் மாதாந்த பருவச்சீட்டு உள்ளவர்கள் முச்சக்கரவண்டி உட்பட வேறு வாகனங்களிலேயே செல்ல வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர். கிலாரண்டன் பிரதேச மாணவர்களும் பொதுமக்களும் பல கிலோமீற்றர் தூரம் நடந்தே செல்கின்றனர். இதனால் உரிய நேரத்தில் பாடசாலை - அலுவலகங்கள் செல்லமுடியாமல் மீண்டும் வீடு திரும்பவேண்டிய நிலை உள்ளது.

எனவே, இப்பிரதேச மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு பாடசாலை நேரங்களில் சீரான பஸ் சேவையை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன் வரவேண்டும் என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மடுல்சீமை - மஹதோவ லோவர் டிவிஷன் தோட்டத்திற்கு செல்லும் பாதையைப் புனரமைக்குமாறு கோரி மஹதோவ பகுதி தோட்ட பொதுமக்களும், பாடசாலை மாணவர்களும் மடுல்சீமை - பிட்டமாறுவ வீதியை மறித்து தொடர்ச்சியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக பசறை - மடுல்சீமையூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது. இப்பாதையைப் புனரமைத்துத்தர அதிகாரிகள் உத்தரவாதம் வழங்கும்வரை இப்போராட்டம் தொடருமென இப்பகுதி மக்கள் உறுதிபடத் தெரிவித்துள்ளனர். (பசறை நிருபர்)

இலங்கைக்கு செல்லுங்கள் - வேறு நாடுகள் வேண்டாம் ரஷ்யத் தூதுவர் லெவான் ரஷ்யர்களிடம் வேண்டுகோள்

(பலாங்கொடை மேலதிக நிருபர்)

இலங்கை மக்கள் கருணை மிக்கவர்கள் என்பதுடன் சிறப்பாக வரவேற்று உபசாரம் செய்கின்றவர்கள். அத்துடன் இலங்கை கண்கவர் இயற்கைக் காட்சிகளை கொண்ட அழகான தீவு. எனவே, உங்கள் விடுமுறையைக் கழிக்க நீங்கள் உலகின் எந்த நாட்டிற்கும் செல்ல வேண்டாம். இலங்கைக்குச் செல்லுங்கள் என இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ரஷ்ய தூதுவர் லெவான் சிமினயொச்சி ஜகர்யான் ரஷ்ய மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். முதலாவது விண்வெளி வீரர் யூரி ககாரின் 1961இல் இலங்கை விஜயம் செய்து 61 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு அவரது சிலை இரத்தினபுரி ஹிதெல்லன சீவலி மகாவித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த வாரம் திரைநீக்கம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

உபசரிப்பில் உன்னதமான இலங்கை மக்கள் சாதனை வீரர் யூரி ககாரினை நினைவு கூர்ந்து நடத்தும் இந்நிகழ்வை முழு ரஷ்ய மக்களுக்கும் வழங்கும் கௌரவமாகவே நான் உணர்கிறேன். கடந்த வருடம் இலங்கைக்கு 68 ஆயிரம் ரஷ்ய உல்லாசப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இந்த எண்ணிக்கை போதாது.

மேலும் அதிகரிக்கப்படல் வேண்டும். இதேவேளை அழகையும் உல்லாசத்தையும் விரும்பும் ரஷ்ய மக்களிடம் நான் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். உங்கள் விடுமுறையைக் கழிக்க நீங்கள் இலங்கைக்கு விஜயம் செய்யுங்கள் என்பதே அந்த வேண்டுகோள் என்றார்.

யாழில் எம்.ஜி.ஆரின் 106ஆவது பிறந்தநாள் கொண்டாட்டம்

(யாழ். நிருபர்)

தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரனின் 106ஆவது பிறந்த தினம் நேற்று முன்தினம் (17) மாலை யாழ்ப்பாணம் கல்வியங்காடு செங்குந்தா பொதுச்சந்தை வளாகத்தில் அமரர் கோப்பாய் சுந்தரலிங்கத்தால் சொந்த நிதியில் அமைத்த எம்.ஜி.ஆர். உருவச்சிலைக்கு மாலை அணிவித்தும் தீபாராதனை காட்டப்பட்டும் மரியாதை செலுத்தி வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

யாழ். எம்.ஜி.ஆர். என அழைக்கப்படும் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த எம்.ஜி.ஆரின் தீவிர இரசிகனான அமரர் சுந்தரலிங்கத்தின் துணைவியார் திருமதி இலட்சுமியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், வலி - கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ், வலி - கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் ராசேந்திரம் செல்வராஜா, கோப்பாய் சுந்தரலிங்கம் குடும்பத்தினர் மற்றும் கல்வியங்காட்டு சமூகத்தினர் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, எம்.ஜி.ஆர். பிறந்தநாளில் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள், தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்ட செயலாளராக சிவபாலசூந்தரன் பொறுப்பேற்பு



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண மாவட்ட செயலாளராக அம்பலவாணர் சிவபாலசுந்தரன் நேற்று புதன்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் காலை 10 மணிக்கு இடம்பெற்ற விசேட நிகழ்வில் பதில் மாவட்ட செயலாளர் ம.பிரதீபனிடமிருந்து கடமைகளை புதிதாக நியமனம் பெற்ற மாவட்ட செயலாளர் பொறுப்பேற்றார்.

இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், வடமாகாண விவசாய அமைச்சு அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

யாழில் குழந்தை உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

தாய்ப்பால் குடித்துவிட்டு உறங்கிய பெண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி பகுதியைச் சேர்ந்த சுலக்சன் ரேணுகா எனும் குழந்தையே உயிரிழந்துள்ளது.

குழந்தையின் தாயார் காலை குழந்தைக்கு பால் கொடுத்து உறங்க வைத்த பின்னர் நீண்டநேரமாக குழந்தை எழும்பாததால் குழந்தையை தாயார் சென்று பார்த்தவேளை குழந்தை அசைவின்றி காணப்பட்டுள்ளது.

அதனையடுத்து, குழந்தையை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசென்றவேளை, குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

யாழ். வீதியில் சுயநினைவின்றி மீட்கப்பட்டவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் முன்பாக சுயநினைவின்றி காணப்பட்ட நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அப்பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவகுமார் (வயது 54) என்பவரே உயிரிழந்துள்ளார். தென்மராட்சி பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் முன்பாக கடந்த 15ஆம் திகதி சுயநினைவற்ற நிலையில் விழுந்து கிடந்துள்ளார். அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (17) உயிரிழந்துள்ளார்.

கலைப் பீடாதிபதியாக பேராசிரியர் ரகுராம்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடத்தின் புதியபீடாதிபதியாக ஊடகக்கற்கைகள்துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் சி. ரகுராம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நாளை 20ஆம் திகதிமுதல் மூன்று வருட காலத்துக்குச் செயற்படும் வகையில் இவர் பீடாதிபதியாகப் பணியாற்றவுள்ளார்.

மன்னார் செயலகத்தில் இடம்பெற்ற சூரிய பொங்கல் விழாவும் உழவர்கள் கௌரவிப்பும்

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்ட செயலக நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் அலுவலர் நலன்புரிச் சங்கத் தலைவரும் மாவட்ட செயலகத்தின் கணக்காளருமான செ.செல்வகுமார் தலைமையில் 2023ஆம் ஆண்டுக்கான பொங்கல் விழாவும் உழவர்கள் கௌரவிப்பும் மாவட்ட செயலகத்தின் விழா மண்டபத்தில் நேற்று முன்தினம் (17) காலை 9 மணியளவில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி அ.ஸ்ரான்லி டி மெல் கலந்துகொண்டு மன்னார் மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு கௌரவத்தை வழங்கினார்.

அத்துடன், தேசிய உற்பத்தித் திறன் போட்டியில் பங்குபற்றி பாராட்டு சான்றிதழ் மன்னார் பிரதேச செயலாளரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலகத்தின் மேலதிக மாவட்ட செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பதவிநிலை உத்தியோகத்தர்கள் உதவி பிரதேச செயலாளர்கள் என்று பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வு மன்னார் மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

மன்னாரில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி உட்பட மூன்று கட்சிகள் கட்டுப்பணம் செலுத்தின

(மன்னார் நகர் நிருபர்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வன்னி தேர்தல் தொகுதியில் மன்னார் மாவட்டத்திற்கான கட்டுப்பணத்தை மூன்று அரசியல் கட்சிகள் நேற்று புதன்கிழமை (18) காலை மன்னார் தேர்தல் அலுவலகத்தில் செலுத்தின.

ஐந்து கட்சிகளை உள்ளடக்கிய ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய மூன்று கட்சிகள் நேற்று (18) காலை மன்னார் தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ஜனநாயக போராளிகள் கட்சி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய 5 கட்சிகளும் இணைந்து கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன.

மன்னார் நகர சபை, மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு ஆகிய பிரதேச சபைகள் உள்ளிட்ட மன்னார் மாவட்டத்திலுள்ள 5 உள்ளூராட்சி மன்றங்களுக்குமான கட்டுப் பணத்தை செலுத்தியுள்ளனர்.

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி சார்பாக முசலி பிரதேச சபைக்கு நேற்று (18) காலை கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி சார்பாக முன்னாள் மேல் மாகாண ஆளுநர் மைத்திரி குணரட்ன தலைமையில் கட்டுப்பணம் செலுத்தப் பட்டுள்ளது.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ஏ.எஸ்.முஹம்மது பஸ்மி மாவட்டத்திலுள்ள 5 உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பொருளாதார நெருக்கடியிலுள்ள 70,000 குடும்பங்களுக்கு பால்மா

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள 70,000 குடும்பங்களுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ‘உணவு பாதுகாப்பு மற்றும் போசாக்கு தொடர்பான தேசிய ஒன்றிணைந்த பொறிமுறை’ ஊடாக 174 மில்லியன் ரூபா பெறுமதியான பால்மாவை பெற்றுக்கொடுக்க பொன்டெரா நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பொன்டெரா நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி திருமதி ஜூடித் ஸ்வொல்ஸ், இப்பால்மாவை நேற்றுமுன்தினம் (17) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜனாதிபதி அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாக கையளித்தார். நாடுமுழுவதும் அடையாளம் காணப்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள 70,000 குடும்பங்களுக்கு இப்பால்மா, மாவட்ட செயலாளர் அலுவலகத்திற்கூடாக பகிர்ந்தளிக்கப்படும்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட தேசிய உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி குழுவின் தலைவரும் ஆலோசகருமான கலாநிதி சுரேன் படகொட கருத்து தெரிவிக்கையில், அனைத்து பிரஜைகளுக்கும் அவசியமான போசாக்கு கிடைப்பதை உறுதிசெய்வதே அரசாங்கத்தின் உணவு பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் நோக்கமெனத் தெரிவித்தார். மிகவும் பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கு போஷணை தேவையை ஈடுசெய்வதே இதன் பிரதான குறிக்கோளென்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்தமைக்காக பொன்டெரா நிறுவனத்துக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

சரியானதைச் செய்ய உறுதிபூண்டுள்ள ஒரு பொறுப்பான நிறுவனம் என்ற வகையில், இலங்கையர்களுக்கு உயர்தரமான பால் போசாக்கைப் பெற்றுக்கொடுப்பதில் பொன்டெரா நிறுவனம் அர்ப்பணிப்புடன் செயற்படும். பொன்டெரா நிறுவனம் கடந்த 40 ஆண்டுகளாக முன்னெடுத்துவரும் சமூக சேவையின் தொடர்ச்சியாகவே இந்த பங்களிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி ஆலோசகர் கலாநிதி சுரேன் படகொட, இலங்கைக்கான நியூசிலாந்தின் பிரதி உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ ட்ரெவலர் பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் ஷவேந்திர சில்வா, பொன்டெரா நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் முகாமைத்துவப் பணிப்பாளர் வித்யா சிவராஜா, பொன்டெரா நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஜூடித் ஸ்வொல்ஸ் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வத்தளை மாபோல நகரசபை பிரதி மேயர் வீ.பிரகாஷின் பிறந்த தினத்தை முன்னிட்டு அண்மையில் ஹேகித்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய மற்றும் உஹுப்பிட்டி ஸ்ரீ முத்துகுமரன் ஆலயங்களின் விசேட பூஜை வழிபாட்டில் கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட படங்களை காணலாம்.

முந்தல் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஆண்டிமுனை சமுர்த்தி வங்கி ஏற்பாட்டில் ஒழுங்குசெய்யப்பட்ட “தைப்பொங்கல் விழா” ஆண்டிமுனையில் நேற்று (18) காலை இடம்பெற்றது. பூஜைகளை உடப்பு வீரபத்திர காளியம்மன் ஆலய பூசகர் நடத்தினார். இதன்போது முந்தல் பிரதேச செயலாளர் பிரியந்த தஸநாயக்க விசேட அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார். அத்துடன், வங்கி அதிகாரிகள், கிராம அலுவலர்கள், பொலிஸ் உத்தியோகத்தர், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர். மிகவும் பின்தங்கிய வாழ்வாதாரத்தில் கஷ்டத்திற்குள்ளான ஆண்டிமுனை, உடப்பு பகுதியைச் சேர்ந்த முதியவர்களுக்கு உலருணவுப் பொதிகள் பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்டன.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜே ஸ்ரீரங்கா ,நேற்று இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் புதிய தலைவராக பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். சர்வமத வழிபாடுகளும் இந்நிகழ்வில் நடைபெற்றன. புதிய காரியாலயமும் இதன்போது திறந்துவைக்கப்பட்டது.

(படங்கள்:- மொஹமட் நஸார்)

சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்வோம்!

வேடுவத் தலைவர் வன்னியலே அத்தோ தெரிவிப்பு

75ஆவது சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி சார்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன விடுத்த அழைப்பை ஏற்று நாடு முழுவதிலும் உள்ள சகல ஆதிவாசிகள் தலைவர்களுடன் இம்முறை தேசிய நிகழ்வில் கலந்துகொள்வதாக ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னியலே அத்தோ 2023.01.17ஆம் திகதி பாராளுமன்றத்தில் சந்தித்தபோது தெரிவித்தார்.

இதற்கான சகல வசதிகளையும் செய்து கொடுப்பதாக பாராளுமன்றத்திலுள்ள பிரதமர் அலுவலகத்தில் தன்னைச் சந்தித்த ஆதிவாசிகள் தலைவரிடம் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

மனித அபிவிருத்தி தாபனத்தின் ஏற்பாட்டில் இலங்கை பெருந்தோட்டங்களின் உணவு பாதுகாப்பு மற்றும் உணவுக்கான உரிமை திட்டத்தினூடாக உலருணவுப் பொதிகள் வழங்கும் வைபவம் லூல்கந்துர வெல்லோயா மேல்பிரிவு தோட்டப்புறப் பிரதேசத்தில் மனித அபிவிருத்தி தாபனத்தின் திட்டமிடல் அதிகாரி லோகேஸ்வரி தலைமையில் இடம்பெற்றது. இதன்போது கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்கு உணவுகள், கைக்குழந்தைகள் உள்ள தாய்மார்களுக்கான போசாக்கு உணவுகள், முதியோர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. - இக்பால் அலி -

ஆதிவாசி பிரதிநிதிகள் குழு பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் பேச்சு

ஆதிவாசிகள் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னில எத்தோ தலைமையிலான ஆதிவாசி பிரதிநிதிகள் குழு (17) பாராளுமன்றத்திற்கு சமூகமளித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைச் சந்தித்தது.

தற்போது ஏற்பட்டுள்ள சமூக மாற்றங்களினால் பல்வேறு பிரச்சினைகளுக்கு அவர்கள் முகங்கொடுத்து வருவதோடு, அவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு பல்வேறு தடைகளும் ஏற்பட்டுள்ளன.

இது தொடர்பான விடயங்களை வன்னில எத்தோ தலைமையிலான குழுவினர் எதிர்க்கட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

தற்போது வசிக்கும் இனக்குழுக்களில் ஆதிவாசிகள் மிகவும் பழமை வாய்ந்த பழங்குடியினர் என அறியப்படுகின்றனர்.

கொழும்பு - 15. மட்டக்குளி காக்கைத்தீவு கரையோரப் பூங்கா முகாமைத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை காக்கைத்தீவு பூங்காவில் நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களும் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் லயன் மனோகரன் ஆகியோர் பொங்கல் விழாவில் கலந்துகொண்டிருப்பதையும் படங்களில் காணலாம் (படப்பிடிப்பு: எம்.எஸ்.சலீம்)

ஏதென்ஸ் 1896 வெண்கலப் பதக்கம் ஏலத்தில் விடப்பட்டது

(ரமணி)

1896ஆம் ஆண்டு ஏதென்ஸில் வழங்கப்பட்ட அரிய ஒலிம்பிக் பதக்கம், இந்த வாரம் RR ஏலத்தில் விற்கப்படும் 395 விளையாட்டுப் பொருட்களில் ஒன்றாகும்

1896ஆம் ஆண்டு ஏதென்ஸில் நடந்த முதல் நவீன விளையாட்டுப் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பிடித்த ஓர்அரிய ஒலிம்பிக் பதக்கம், அதன் பெட்டியுடன் முழுமையாக் உள்ளது.

நவீன சகாப்தத்தின் முதல் ஒலிம்பிக்கில் முதல் இடத்தையும், இரண்டாம் இடத்தையும் பெற்றவர்களுக்கு மட்டும்தான் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

சுமார் $70,000 (57,000/65,000)க்கு ஏலத்தில் விற்கப்படுமெ ன எதிர்பார்க்கப்படும். இதைத் தவிர, 38 ஒலிம்பிக் டோர்ச்கள் உட்பட 395 பொருட்கள் ஏலத்தில் விடப்படவுள்ளன. இதில் நியூ ஹாம்ப்ஷயர் 1936 பேர்லின் விளையாட்டுகளுக்காக நிறுவப்பட்ட முதல் ரிலேயில் பாவித்த பொருளும் அடக்கம்.

பரிஸ் 1900இலிருந்து ஐந்து ஒலிம்பிக் பதக்கங்களும், 1906இல் ஏதென்ஸ், ஸ்டாக்ஹோம் 1912, பாரிஸ் 1924, ஆம்ஸ்டர்டாம் 1928, லொஸ் ஏஞ்சல்ஸ் 1932, லண்டன் 1948, மெல்பேர்ன் மற்றும் ஸ்டாக்ஹோம், ரோம் 4160, 1900 ஸ்டாக்ஹோம். 1972, மாண்ட்ரல் 1976, மொஸ்கோ 1980, லொஸ் ஏஞ்சல்ஸ் 1984, சியோல் 1988, பார்சிலோனா 1992, பீஜிங் 2008, டோக்கியோ 2020 பொருட்களும் ஏலத்தில் விடப்படவுள்ளன.

டோக்கியோ 2020 தங்கப் பதக்கம் கியூபா குத்துச்சண்டை வீரர் ரோனியல் இக்லேசியாஸினுடையது. இது இக்லேசியாஸின் இரண்டாவது ஒலிம்பிக் தங்கம். குறைந்தபட்சம் $50,000 (41,000/46,000) கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விதிவிலக்காக அரிதான குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் பதக்கங்கள் ஏலத்தில் விடப்படவுள்ளன. இவை இரண்டும் $40,000 (32,500/37,000) அல்லது அதற்கு மேற்பட்டவற்றைக் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒஸ்லோ 1952இலிருந்து ஒரு தங்கமும் ஏலத்துக்கு வருகிறது. எட்டு ஒலிம்பிக் தீபங்கள் சுமார் $10,000 (8,000/9,200)க்கு விற்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பட்டியலில் முதலிடத்தில் உள்ளது Albertville 1992 Winter Games Torch, $50,000 (41,000/46,000) க்கு அதிகமாக வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

லேக் பிளாசிட் 1980லிருந்து ஒரு டோர்ச் $30,000 (24,500/28,800) கொண்டுவரும் என எதிர்பார்க்கப்படுகிறது மற்றும் சப்போரோ 1972 மாடல் $25,000 (20,000/23,100) அல்லது அதற்கும் அதிகமாக விற்கப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பேர்லின் 1936 டோர்ச் $5,000 (4,000/4,600) விற்பனை விலையில் எதிர்பார்க்கப்படுகிறது.

சேகரிப்பைத் தொடங்க விரும்புவோருக்கு $1,000 (815/925) என எதிர்பார்க்கப்படும் டோர்ச்களின் விற்பனை விலைகள் உள்ளன.

மற்ற குறிப்பிடத்தக்க இடங்களில் எண் அடங்கும். 6117, 1976ஆம் ஆண்டு மாண்ட்ரீலில் அமெரிக்காவின் அப்போதைய 16 வயதான கிரெக் லூகானிஸ் 10 மீ. பிளாட்போர்ம் டைவிங் வெள்ளிப் பதக்கத்திற்குச் செல்லும்போது அணிந்திருந்த உண்மையான போட்டி நீச்சல் டிரங்குகள் இவை.

குறைந்தபட்ச ஏலத்தொகை $200 (160/185), ஆனால், டிரங்குகள் $1,000 (815/925) அல்லது அதற்கும் அதிகமாக விற்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது

நியூசிலாந்து சுற்றுப்பயணத்தில் அணியில் இணையும் பெரேரா, சமீர

இலங்கை கிரிக்கெட் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான குசல் ஜனித் பெரேரா மற்றும் வேகப்பந்துவீச்சாளர் துஷ்மந்த சமீர ஆகிய இருவரும் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள நியூசிலாந்து சுற்றுப்பயணத்திற்கான தெரிவுக்குத் தயாராக இருப்பதாக இலங்கை கிரிக்கெட் மருத்துவக் குழுவின் தலைவர் பேராசிரியர் அர்ஜுன டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், குசல் பெரேரா மீண்டும் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட தயாராக உள்ளார் என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். குசல் ஜனித் மற்றும் துஷ்மந்த சமீர ஆகிய இருவரும் இந்த நாட்களில் பயிற்சியில் உள்ளனர். அவர்கள் இருவரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள நியூசிலாந்து சுற்றுப்பயணத்திற்கு தயாராக உள்ளனர். இலங்கை அணியில் இடம்பிடிக்க அவருக்கு வேறெந்த பிரச்சினையும் இல்லை என்றால், அவர் நிச்சயமாக நியூசிலாந்து சுற்றுப்பயணத்தில் இடம்பெறுவார் என தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், அதிரடி ஆரம்ப துடுப்பாட்ட வீரருமான குசல் ஜனித் பெரேரா கடந்த 2021ஆம் ஆண்டு ஜூன் – ஜுலை மாதங்களில் நடைபெற்ற இங்கிலாந்து சுற்றுப்பயணத்திற்குப் பிறகு தோள்பட்டையில் நீண்டகாலமாக இருந்துவந்த உபாதைக்கு சத்திரசிகிச்சை செய்துகொண்டார்.

துஷ்மந்த சமீர, கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற ரி20 உலகக் கிண்ணத் தொடரில் ஐக்கிய அரபு இராச்சிய அணியுடனான முதல் சுற்று 2ஆவது போட்டியின்போது உபாதைக்குள்ளானார். இதனையடுத்து அவருக்கு அவுஸ்திரேலியாவில் வைத்து சத்திரசிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டியில் நிஸ்ரின் இல்லம் சம்பியன்

(எம்.என்.எம். அப்ராஸ், ஏ.எல்.எம். ஷினாஸ், யூ.கே.காலித்தீன்)

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் (தேசிய பாடசாலை) 2023 இல்ல விளையாட்டுப் போட்டியில் நிஸ்ரின் இல்லம் சம்பியனானது.

இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வுகள் கல்லூரி மைதானத்தில் அதிபர் யூ.எல்.எம்.அமீன் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜெயந்த ரத்னாயக்க, கௌரவ அதிதியாக கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் லசந்த புத்திக, கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம், கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்சின் பக்கீர் மற்றும் அதிதிகளாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கலாநிதி சபினா இம்தியாஸ், கல்முனை பொலிஸ் நிலைய பலவித குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எல்.ரபீக், பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள், அணிநடை, மைதான கண்காட்சி, வினோத உடை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் போட்டிகளின் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சான்றிதழ்கள், பதக்கங்கள் வெற்றிக் கிண்ணங்கள் என்பன கலந்து கொண்ட அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டது.

இல்லங்களின் வெற்றி முறையே நிஸ்ரின் (சிவப்பு நிறம்) 109 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், சபரான் (மஞ்சள் நிறம்) 106 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், வர்தா (பச்சை நிறம்) 104 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும், ஜெஸ்மின் (நீலம் நிறம்) 91 புள்ளிகளைப் பெற்று நான்காமிடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

குச்சவெளியில் செயலாளர்களுக்கான பிரியாவிடையும் வரவேற்பு நிகழ்வும்

(கந்தளாய் நிருபர்)

குச்சவெளி பிரதேச சபையில் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக செயலாளராக கடமையாற்றி வருடாந்த இடமாற்றத்தின் மூலம் இம்முறை இடமாற்றம் பெற்றுச்செல்கின்ற சபையின் செயலாளர் திருமதி மாலினி அசோக்குமாருக்கு பிரியாவிடை நிகழ்வும் குச்சவெளி பிரதேச சபைக்கு புதிதாக வருகை தந்துள்ள செயலாளர் ஜனாப் எம்.கே.அனீஸை வரவேற்கின்ற நிகழ்வும் நேற்று முன்தினம் (17) பிரதேச சபையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஜனாப் ஏ.முபாறக் தலைமையில் இடம்பெற்றன.

இங்கு உரையாற்றிய குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஜனாப்.ஏ.முபாறக், 2018ஆம் ஆண்டு குச்சவெளி பிரதேச சபையில் இரண்டாவது தடவையாக தவிசாளராக பதவியேற்ற நாள்முதல் இன்றுவரை ஒரு பெண் செயலாளராக இருந்தும் விடுமுறைகளைக் குறைத்து எமது சபையின் ஆட்சிக்கு சிறந்த ஒத்துழைப்பு மற்றும் எமது சபையின் உத்தியோகத்தர், ஊழியர்களுக்கு மற்றும் எமது பிரதேச சபை மக்களுக்காக சிறப்பான சேவையை வழங்கிய இந்த செயலாளருக்கு எமது பிரதேச சபை மற்றும் பிரதேச மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன், தாங்கள் செல்கின்ற இடத்தில் சிறந்த சேவையை வழங்க எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிப்பதுடன். எமது சபைக்கு புதிதாக வந்திருக்கின்ற செயலாளர் ஜனாப் எம்.கே.அனீஸுக்கு நான் உட்பட எமது சபையின் உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென கேட்டுக்கொள்வதுடன், இவரின் சேவை எமது மக்களுக்கு தொடர எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன் - என்றார்.

கிழக்கு இந்துக்குருமார் ஒன்றியத்தால் இரண்டாவது வேத சிவாகம பாடசாலை ஆரம்பித்துவைப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இரண்டாவது வேத சிவாகம பாடசாலை மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச கிளையில் நேற்று (18) ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக அவ்வமைப்பின் தலைவர் சிவ.ஸ்ரீ.கணேச. லோகநாதக் குருக்கள் தெரிவித்தார்.

வவுணதீவு பிரதேசத்தை மையப்படுத்தி அப்பகுதியிலுள்ள இந்துக்குருமாரை நன்கு பயிற்றுவிப்பதற்காக அப்பகுதியில் அமைந்துள்ள இறக்கத்துமுனை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இந்த வேத சிவாகம பயிற்சிப் பாடசாலை ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையில் வேதாகமம், ஆகமம், பூஜை முறைகள், யோகாசனம் மற்றும் சங்கீதம் போன்ற பயிற்சிகள் போதிக்கப்படவுள்ளன.

கிழக்கிலங்கையிலுள்ள இந்துக்குருமாரின் வசதி கருதியும், அவர்களது வளர்ச்சிகள் மேலோங்க வேண்டியும், வேதம், ஆகமம் போன்றவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கும், பூஜை முறைகளை மேலும் சிறப்பான முறையில் கற்றுத் தேறவும், குருமார்களை வளர்த்தெடுக்கின்ற நோக்கிலேயே தம்மால் இரண்டாவது வேத சிவாகம பாடசாலையாக வவுணதீவில் இது தற்போது ஆரம்பிக்கப்படவுள்ளது. அப்பகுதியிலுள்ள குருமார்கள் கலந்து, கற்றுக்கொண்டு சிறந்த குருமாராக விளங்குவதற்கு முன்வந்துள்ளதாக கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின தலைவர் சிவஸ்ரீ க.லோகநாதக் குருக்கள் மேலும் தெரிவித்துள்ளார்.

அவ்வமைப்பின் வவுணதீவு பிரதேச கிளையின் தலைவர் சிவஸ்ரீ முரசொழிமாறக் குருக்கள் மற்றும் 30 இற்கு மேற்பட்ட வேத சிவாகமங்களைக் கற்கும் குருமார்கள் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

பெரியநீலாவணை புலவர்மணியில் ஸ்மார்ட் வகுப்பறை திறந்துவைப்பு

(பெரியநீலாவணை நிருபர்)

கல்முனை வலயத்திற்குட்பட்ட பெரியநீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலயத்தில் ஸ்மார்ட் வகுப்பறையை திறந்துவைக்கும் நிகழ்வு பாடசாலையின் பிரதி அதிபர் எம்.சி.நஸார் ஒருங்கிணைப்போடு அதிபர் எம்.எம்.முஹம்மட் நியாஸ் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சுமார் 1.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மாணவர்களின் நவீன கற்றலுக்குத் தேவையான ஸ்மார்ட் போர்ட் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டது. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்குத் தேவையான நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட வகுப்பறையும் இதன்போது திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மருதமுனை ஹேன்லூம் சிட்டி (Handloom City) நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் மஸ்ஜிதுல் மக்பூலியா ஜும்ஆ பள்ளிவாசல் தலைவருமான எஸ்.எல்.எம். ஜெமீல், கல்முனை கோட்டக்கல்விப் பணிப்பாளர் வி.எம்.ஸம்ஸம் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் சம்மாந்துறை ஹுதா சமூர்த்தி வங்கி முகாமையாளர் எம்.ஐ.எம் முஜீப் விசேட அதிதியாகவும் கலந்துகொண்டனர்.

இதில் பாடசாலையின் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என கலந்துகொண்டனர்.

உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கிய ஆமை

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளைக் கடற்கரையில் உயிரிழந்த நிலையில் இராட்சத ஆமை ஒன்று நேற்று (18) காலை கரை ஒதுங்கியுள்ளது. கடற்கரைக்குச் சென்ற மீனவர்கள் ஆமை ஒன்று கரையில் ஒதுங்கி இருப்பதை அவதானித்துள்ளனர்.

இவ்வாறு கரையில் ஒதுங்கி இருந்த ஆமை உயிரிழந்துள்ளதாகவும், இது சுமார் 50 கிலோவிற்கு மேல் நிறை இருக்கும் எனவும் அவ்விடத்திலிருந்த மீனவர்கள் தெரிவித்தனர்.

இதுபோன்று கடந்த வருடமும் இவ்வாறு கிழக்குக் கடற்கரைப் பகுதியில் பல ஆமைகள் உயிரிழந்த நிலையில், கரை ஒதுங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டு. மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்கு கட்டுப்பணம் செலுத்தியது ஐ.தே.க.

(மட்டக்களப்பு நிருபர்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி மட்டக்களப்பு மாநகர சபை உட்பட மாவட்டத்திலுள்ள 12 உள்ளூராட்சி சபைகளுக்கும் நேற்று (18) கட்டுப்பணம் செலுத்தியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் காத்தான்குடி நகரசபைக்கான அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஷாலி ஷாபி தெரிவித்தார்.

மாட்டக்களப்பு மாநகர சபை காத்தான்குடி ஏறாவூர் நகர சபைகள் அடங்கலாக மாவட்டத்தின் அனைத்து சபைகளிலும் ஐக்கிய தேசிய கட்சி போட்டியிடுகிறது.

மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்திய ஐக்கிய தேசிய கட்சி நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்யும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இளம் யுவதி தூக்கிட்டுத் தற்கொலை

மட்டு. இருதயபுரத்தில் சம்பவம்

(மண்டூர் நிருபர்)

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இருதயபுர பிரதேசத்தில் இளம் யுவதி ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் நேற்று முன்தினம் (17) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

11ஆம் குறுக்கு இருதயபுரம் (மேற்கு) பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய சூரியகுமார் துவாரகா என்பவரே இவ்வாறு தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டவராவார்.

குறித்த யுவதி இரு வீட்டாரின் சம்மதத்துக் கிணங்க நீண்டகாலமாக இளைஞர் ஒருவரை காதலித்து வருவதாகவும் அவரது காதலன் தொழில் நிமிர்த்தம் வெளிநாடு செல்லவிருந்த நிலையில், அதனை மறுத்ததாகவும் சம்பவ தினத்தன்று வழக்கம்போல் தனது வீட்டின் அறையினுள் நித்திரைசெய்ய சென்றதாகவும் பின்னர் மறுநாள் யுவதியின் தாயார் வீட்டின் அறையின் கதவைத்திறந்து பார்த்தபோது குறித்த யுவதி தூக்கிட்டுத் தற்கொலை செய்த நிலையில் காணப்பட்டதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் பீற்றர்போலின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்குட்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். மட்டக்களப்பு பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முஸ்லிம்கள் இனத்துவ அரசியலைக் கைவிட்டு தேசிய அரசியலில் பயணிக்க வேண்டியது காலத்தின் தேவை

முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஜெமீல்

(சாய்ந்தமருது நிருபர்)

முஸ்லிம் சமூகம் இனத்துவ அரசியலைக் கைவிட்டு, தேசிய அரசியல் நீரோட்டத்தில் பயணிக்கவேண்டியது காலத்தின் தேவையாகும் - என்று கிழக்கு மாகாண சபையின் முன்னாள் குழுத் தலைவர் கலாநிதி ஏ.எம்.ஜெமீல் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தேசிய அமைப்பாளராக பதவி வகித்துவந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து, அக்கட்சியின் கல்முனைத் தொகுதி அமைப்பாளராகவும் கிழக்கு மாகாண தமிழ், முஸ்லிம் பிரதேசங்களுக்கான ஒருங்கிணைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ள ஏ.எம்.ஜெமீல் தனது அரசியல் மாற்றம் குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது,

முஸ்லிம் சமூகம் இன ரீதியிலான அரசியலை முன்னெடுத்து, அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லப்படுவதை இனியும் அனுமதிக்க முடியாது.

தலைவர் அஷ்ரபின் மறைவுக்குப் பின்னர் முஸ்லிம் அடையாள அரசியல் என்ற போர்வையில் கிழக்கு மாகாணத்திற்கு வெளியேயுள்ள தலைமைகள் இங்கு வந்து, இனவாதம் பேசி, மக்களை உசுப்பேற்றி, வாக்குகளை சூறையாடி, இனவாத அரசியல் செய்தமையால் சமூகம் இதுவரை அடைந்த நன்மைதான் என்ன என்று நாங்கள் கேட்க வேண்டியுள்ளது.

இதனை சுயமதிப்பீடு செய்துகொள்ளத் தவறுவோமாயின் எமது சமூகம் இன்னும் பாரிய விளைவுகளையே சந்திக்க நேரிடும் என்பதை எல்லோரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இனப்பிரச்சினை தலைதூக்கிய காலகட்டத்தில் மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் சமூகத்தின் தேவை கருதி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கி, அதில் வெற்றியும் கண்டார்.

ஆனால், அவரது அந்திம காலத்தில் இனத்துவ அரசியலை தொடர்ந்தும் முன்னெடுப்பதானது சமூகத்திற்கு ஆரோக்கியமானதல்ல என்ற தூரநோக்கு சிந்தனையுடனேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குப் பதிலீடாக நுஆ எனும் தேசிய ஐக்கிய முன்னணியை ஸ்தாபித்து, தேசிய அரசியலைத் தொடக்கிவைத்திருந்தார் என்பதை எவரும் மறுக்க முடியாது.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் முஸ்லிம் சமூகமானது இனத்துவ அரசியலை விடுத்து, தேசிய அரசியலை முன்னெடுக்க வேண்டியதன் அவசியம் இன்னும் வெகுவாக உணரப்படுகிறது.

தேசிய ஐக்கியம், சகவாழ்வு என்பவற்றின் ஊடாகவே ஏனைய இனங்களுக்கு நிகராக முஸ்லிம் சமூகமும் சமத்துவ உரிமைகளுடன் தலைநிமிர்ந்து வாழ முடியும் என்பதையும் எமது இளம் தலைமுறையினரின் எதிர்காலம் பிரகாசமாக அமையும் என்பதையும் நான் திடமாக நம்புகிறேன்.

இது இவ்வாறிருக்க, தறபோதைய சூழ்நிலையில் அதலபாதாளத்தில் வீழ்ந்திருக்கின்ற நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பக்கூடிய வல்லமை ஐ.தே.க. தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டுமே இருக்கிறது என்கிற யதார்த்தம் உணரப்பட்டதனாலேயே பாராளுமன்றத்தால் அவர் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்.

இவற்றை கருத்திற்கொண்டே சமூகத்தின் நலன் கருதியும் கிழக்கு மாகாண அபிவிருத்தியை இலக்காகக்கொண்டும் நான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கைகோர்த்து ஐக்கிய தேசியக் கட்சியில் எனது அரசியல் பயணத்தை முன்னெடுக்கத் தீர்மானித்திருக்கிறேன்.

குறிப்பாக, இனப்பாகுபாடுகளுக்கப்பால் அம்பாறை மாவட்டத்தையும் முழு கிழக்கு மாகாணத்தையும் கட்டியெழுப்புகின்ற ஒரு புதிய அத்தியாயத்தை தோற்றுவிக்கத் திட்டமிட்டுள்ளோம் - என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

'பண்டைய மட்டக்களப்பு வரலாற்றில் அக்கரைப்பற்றும், தமிழரும்' நூல் வெளியீடு

(ஆலையடிவேம்பு நிருபர்)

ஆய்வார்வலரும், தொல்லியலாளருமான கலாபூஷணம் நா.நவநாயகமூர்த்தி எழுதிய 'பண்டைய மட்டக்களப்பு வரலாற்றில் அக்கரைப்பற்றும், தமிழரும்' எனும் ஆய்வுநூல் எதிர்வரும் 2023.02.12ஆம் திகதி வெளியீடு செய்து வைக்கப்படவுள்ளது.

அக்கரைப்பற்று தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையுடன் ஆலையடிவேம்பு கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வு தொடர்பான முன்னாயத்த கூட்டம் தமிழ்ச் சங்க அலுவலகத்தில் நடைபெற்றபோதே இத்தகவல் வெளியிடப்பட்டது.

தமிழ் சங்கத்தின் தலைவர் க.இரத்தினவேல் மற்றும் தலைவர் நா.சுதாகரன் ஆகியோரின் ஒருங்கிணைந்த தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் நூல் வெளியீடு தொடர்பான தகவலை ஆசிரியரும் சமூக ஆர்வலருமான எஸ்.புண்ணியமூர்த்தி தெரிவித்ததுடன், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு தொடர்பான தகவல்களை சமூக ஆர்வலர் எஸ்.கனகரெத்தினம் குறிப்பிட்டார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்நூலை எமது பிரதேசத்தின் மிகப்பெரும் சொத்தாகக் கருதப்படும் ஆய்வார்வலரும், தொல்லியலாளருமான கலாபூஷணம் நா.நவநாயகமூர்த்தி நூலாசிரியராக இருந்து உருவாக்கியுள்ளதுடன், 167 பக்கங்களைக் கொண்டதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்நூலின் உருவாக்கத்திற்கான நிதி ஏற்பாட்டை ஜீவாதார சித்தவித்தியா அறக்கட்டளை வழங்கியுள்ளதுடன், வெளியீடு செய்துவைக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டுள்ளது.

இதேநேரம் அக்கரைப்பற்று தமிழ்ச் சங்கத்தின் புதிய ஆண்டுக்கான நிர்வாக சபைக் கூட்டமும் நேற்று நடைபெற்றது.

இதன்போது சங்கத்தின் புதிய செயலாளராக என்.செல்வநாதன் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

போடியார் புலம்பல்!

தேர்தல ஒத்திவைச்சா வீதிக்கு மக்கள் இறங்குவாங்களாம் எண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜீத் சொல்லுறாரு எலுவா..?

அடே பொடியா சனத்துக்கு இப்ப தேர்தல விட சோறுதான் முக்கியம்.. நீங்க வீதிக்கு இறங்கி கூத்தாடினாலும் நரில் ராஜபக்ஷ எப்படியாவது தேர்தல இழுத்தடிக்காம உடமாட்டாரு.

அவருக்கு உள்ளூராட்சி தேர்தல விட அடுத்த ஜனாதிபதியாவதற்கு ஆரயும் குழிவெட்டி ஜெயிக்கத்தான் பாப்பாரு.. இருந்து பாருங்கவன்..!

நாட்டின் 75ஆவது சுதந்திர தின நிகழ்வுகளுக்கான முன்னாயத்த ஏற்பாடுகள் மட்டக்களப்பில் ஆரம்பம்

(மட்டக்களப்பு நிருபர்)

இலங்கைத் திருநாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் சிறப்பு நிகழ்வுகளை நடத்த மாவட்ட செயலகம் ஏற்பாடுகளை செய்து வருகின்றது. இதற்கான முன்னாயத்தம் தொடர்பான விசேட கலந்துரையாடல் மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந் தலைமையில் நேற்று முன்தினம் (17) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

ஆங்கிலேயரின் காலனித்துவத்திலிருந்து இலங்கைத் திருநாடு சுதந்திரம் பெற்று இவ்வாண்டுடன் 75 வருடங்கள் நிறைவு பெறுகின்றன. இதனை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் 75ஆவது சுதந்திர தின ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. மேலும் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 75 இலட்சம் மரக்கன்றுகள் நடும் வேலைத்திட்டம் கடந்த ஆண்டிலிருந்து நடைபெற்று வருகின்றன.

இதனடிப்படையில் இச்சுதந்திர தின நிகழ்வை மட்டக்களப்பு மாவட்ட ரீதியாக சிறப்பாக நடத்துவதற்கான முன்னாயத்த ஏற்பாடுகள் பற்றிய கலந்துரையடல் அரச நிர்வாகம், பொலிஸ், பாதுகாப்பு, கல்வி உட்பட்ட சம்பந்தப்பட்ட பிரிவுகளின் பிரதானிகளுடன் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது காணி பிரிவிற்கான மேலதிக அரசாங்க அதிபர் நவரூபரஞ்ஜினி முகுந்தன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, உதவி மாவட்ட செயலாளர் நவேஸ்வரன், இராணுவத்தின் 38ஆவது பிரிவிற்கான கட்டளைத் தளபதி லெப்டினன்ட் கேர்ணல் நிலந்த, கெப்டன் எம்.ஜெகதரன், மட்டக்களப்பு பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகர் எம்.ஐ.உவைஸ் உட்பட 231ஆவது படைப்பிரிவு மற்றும் வான்படை உயர் அதிகாரிகள், மட்டக்களப்பு மாநகர சபை, வலயக் கல்வி அலுவலகம் உள்ளிட்ட பல அரச திணைக்கள உயர் அதிகாரிகள் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட புதிய அரசாங்க அதிபராக கலாமதி பத்மராஜா நியமனம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட புதிய அரசாங்க அதிபராக திருமதி கலாமதி பத்மராஜா நேற்று முன்தினம் (17) பிற்பகல் பிரதமர் அலுவலகத்தில் வைத்து தமக்கான நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராகவும், கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராகவும் முன்னர் பதவி வகித்துள்ளார்.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக கடமை யாற்றிய கே.கருணாகரன் ஓய்வுபெற்றுச் சென்றதைத் தொடர்ந்து நிலவிய வெற்றிடத்திற்கு புதிய அரசாங்க அதிபராக திருமதி கலாமதி பத்மராஜா நியமிக்கப்பட்டுள்ளதுடன், இவர் கடந்த 2020ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக சசீலன் நியமனம்

(ரவ்பீக் பாயிஸ், அப்துல் சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக (பதில் கடமை) இலங்கை நிர்வாக சேவையின் இரண்டாம் தர அதிகாரி ஆர். சசீலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நியமனம் கடந்த 16ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் தேர்தல் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்பட்ட ஆர்.சசீலன் இதற்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தின் உதவித் தேர்தல் ஆணையாளராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈரோஸ் ஜனநாயக முன்னணி ஓர் அரசியல் கட்சியாக மக்கள் முன் தேர்தலில் களமிறங்கும்!

கட்சித் தலைவர் ஸ்ரீ ராஜராஜேந்திரா

ஈழவர் ஜனநாயக முன்னணி எந்தக் கட்சியுடனும் இதுவரை கூட்டுச்சேரவில்லை. எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஓர் அரசியல் கட்சியாக எமது ஈரோஸ் ஜனநாயக முன்னணி மக்கள் முன் மக்கள் கட்சியாக தேர்தலில் களமிறங்கும், கட்சிகளின் தேர்தல் கூட்டுகளுக்கப்பால் மக்களுடைய உரிமைகள், உடைமைப் போராட்டம் இவற்றை முன்னிறுத்தி, போலித் தேர்தல் கூட்டாக இல்லாமல் மக்களுடைய அபிலாஷைகளை வென்றெடுக்கக்கூடிய வகையில் அக்கூட்டு அமையவேண்டும் - என அக்கட்சியின் தலைவர் இரா.ஸ்ரீ ராஜராஜேந்திரா தெரிவித்தார்.

மட்டக்களப்பில் அமைந்துள்ள கிழக்கு ஊடக மன்றத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இக்கருத்தை தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கட்சியின் ஆலோசகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான குணசீலன் சௌந்தரராஜா, கட்சியின் பொருளாளர் ஸ்ரீஸ்கந்தராஜா, ஊடக இணைப்பாளர் பகீரதன், மத்திய குழு உறுப்பினர் சுந்தரலிங்கம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஒரு கட்சியானது மக்களின் தேவைகளுக்கு நீதிமன்றங்களில் நிற்பதற்கப்பால் கட்சியின் பதவி, பட்டங்கள், யார் அந்தக் கட்சியில் பதவியை வகிக்க வேண்டும் என்கின்ற நிலைப்பாட்டில் நீதிமன்றங்களில் நிற்கின்ற அந்த கீழ்த்தரமான கட்சியாக இல்லாமல் மக்களின் பிரச்சினைகளை முன்நிறுத்தி மக்களுக்காக மன்றங்களில் ஏறி மக்களுக்கான கட்சியாக தொடர்ந்தும் செயற்படுவோம் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

தேர்தலுக்காக இல்லாமல் மக்கள் நலன்சார்ந்து மக்களுக்காக செயற்படக்கூடிய கட்சிகளுடன் ஓர் உறுதிப்பாட்டுடன் சேர்ந்து பயணிப்பதை நாம் விரும்புகின்றோம்.

இதேவேளை, ஈரோஸ் ஜனநாயக முன்னணி எனும் பெயரில் ஒலிபெருக்கி சின்னத்தில் நாம் எமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றோம், இதேபோன்று ஈழவர் ஜனநாயக முன்னணி எனும் பெயரில் இரா.பிரபாகரனின் கட்சியும் அவர்களது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அது அவர்களது ஜனநாயக உரிமை. ஆனால், இந்த இரண்டு கட்சிகளும் தனித்தே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

ஈரோஸ் ஜனநாயக முன்னணி
EROS D
TIC FRONT
EMOCRATIC FRONT
ரோஸ் ஜ
க முன்ன
FRO
ROS D

எமது ஈரோஸ் ஜனநாயக முன்னணி எந்தக் கட்சியுடனும் இதுவரை கூட்டுச்சேரவில்லை என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

மட்டு. மூன்று கல்வி வலயங்களுக்கும் புதிய பணிப்பாளர்கள் நியமனம்

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்குடா, பட்டிருப்பு மற்றும் மட்டக்களப்பு மேற்கு ஆகிய கல்வி வலயங்களுக்கு கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளரால் புதிய வலயக் கல்விப் பணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் கல்குடா கல்வி வலயத்திற்கு த.அனந்தரூபனும், பட்டிருப்பு கல்வி வலயத்திற்கு சி.சிறிதரனும், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்கு தி.ரவியும் வலயக் கல்விப் பணிப்பாளர்களாக நியமனம் பெற்றிருக்கிறார்கள்.

இவர்களில் த.அனந்தரூபன் மற்றும் தி.ரவி ஆகியோர் அண்மையில் இடம்பெற்ற நேர்முகத் தேர்வின் அடிப்படையிலும், சி.சிறிதரன் இடமாற்றம் மூலமும் கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளரால் நியமிக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

உக்ரைனில் ஹெலிகொப்டர் விபத்து: உள்துறை அமைச்சர் உட்பட 18 பேர் பலி!

உக்ரைனில் ஹெலிகொப்டர் ஒன்று வீழ்ந்து நொறுங்கியதில் அந்நாட்டு உள்விவகார அமைச்சர், உள்விவாகர இணையமைச்சர் மற்றும் மூன்று குழந்தைகள் உட்பட 18 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைனின் உள்துறை அமைச்சர் டெனிஸ் மொனாஸ்டிர்ஸ்கி (Denis Monastyrsky), உள்துறை இணையமைச்சர் யெவன் எயனின் (Yevhen Yenin) மற்றும் அமைச்சு அதிகாரிகள் நேற்று ஹெலிகொப்டரில் சென்றிருந்தனர்.

இந்நிலையில், ஹெலிகொப்டர் தலைநகர் கீவ் நகருக்கு 20 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ப்ரோவெரி என்ற பகுதி அருகே சென்றுகொண்டிருந்தபோது, ஹெலிகொப்டர் திடீரென கட்டுப்பாட்டை இழந்து, அங்கிருந்த பாலர் பாடசாலை அருகே நிலைத் தடுமாறி கீழே வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில், உக்ரைனின் உள்துறை அமைச்சர் டெனிஸ் மொனாஸ்டிர்ஸ்கி, உள்துறை இணை அமைச்சர், அமைச்சு அதிகாரிகள், பாலர் பாடசாலை குழந்தைகள் மூவர் உட்பட 18 பேர் உயிரிழந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கப்பெற்ற முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைன் மீது ரஷ்யா நடத்திவரும் போர் இன்னும் சில வாரங்களில் ஓர் ஆண்டை நெருங்கவுள்ளது. இந்தப் போரில் உக்ரைனின் பல்வேறு நகரங்கள் உருக்குலைந்து போயுள்ளன. அதேவேளை, இந்தப் போரில் ரஷ்யாவும் பெரும் இழப்பை சந்தித்து வருகிறது. போரில் ஆயிரக்கணக்கான ரஷ்ய வீரர்கள் உயிரிழந்துள்ளனர். எனினும், போரிலிருந்து பின்வாங்காத ரஷ்யா தொடர்ந்து வீரர்களை அணிதிரட்டி போர்முனைக்கு அனுப்பிவருகிறது.

உலக செய்திகள்

பாகிஸ்தானில் 271 எம்.பிக்கள் எம்.எல்.ஏக்கள் இடைநீக்கம்

பாகிஸ்தானில் தங்களது சொத்து விவரங்களை சமர்ப்பிக்கத் தவறிய 271 எம்.பிக்கள் மற்றும் எம்.எல்.ஏக்களை இடைநீக்கம் செய்து அந்த நாட்டு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தான் சட்டப்படி, அனைத்து பாராளுமன்ற மற்றும் மாகாணப் பேரவை உறுப்பினர்களும் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 31ஆம் திகதிக்குள் சொத்து விவரங்களை தேர்தல் ஆணையத்திடம் தாக்கல் செய்ய வேண்டும்.

இந்நிலையில், கடந்த மாதம் 31ஆம் திகதிக்குப் பிறகும் அந்த விவரங்களை சமர்ப்பிக்காத 136 பாராளுமன்ற கீழவை உறுப்பினர்கள், 21 மேலவை உறுப்பினர்கள், மாகாணப் பேரவைகளின் 114 உறுப்பினர்கள் தற்போது இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இன்று இலங்கை வருகிறார் இந்திய வெளியுறவு அமைச்சர்

கடன் மறுசீரமைப்புக் கூட்டத்தில் பங்கேற்பு

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக விவாதிப்பதற்காக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கர் இன்று (19) இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராணுவ அமைச்சின் கெபினட் கமிட்டி உறுப்பினராகவுள்ள ஜெய்ஷங்கரின் கொழும்பு பயணத்தின்போது விவாதிக்கப்பட வேண்டியவை குறித்து, இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலுடன் ஜெய்ஷங்கர் ஆலோசனை நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

இந்த பயணத்தின்போது, ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியாவை உறுப்பினராக்க ஆதரவு தரும்படி இலங்கையை அவர் வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள, ஜி - 20 மாநாட்டு கூட்டத்தில் பங்கேற்க இலங்கைக்கு அவர் அழைப்பு விடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில், அந்நிய செலாவணி கையிருப்பில் தட்டுப்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து, கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து மக்கள் புரட்சி வெடித்ததன் காரணமாக நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றார்.

இந்நிலையில், இலங்கைக்கு தேவையான பொருளாதார உதவிகள் மற்றும் ஆலோசனைகளை இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகள் அளித்து வருகின்றன. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது குறித்து, இந்த மூன்று நாடுகளுடன் இலங்கை அரசு தொடர்ந்து விவாதித்து வருகின்றது.

இலங்கை தொலைத்தொடர்புத்துறை மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகிய நிறுவனங்களை தனியார்மயமாக்க அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

இந்நிலையில், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு குறித்து அந்நாட்டு அரசு அதிகாரிகளுடன் விவாதிக்க, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கர் இன்று கொழும்பு செல்லவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கோட்டாவுக்கு ஆப்பு

உலகின் எந்த மூலையிலும் போர்க் குற்றங்கள் நடந்தாலும், இதற்கு காரணமானவர்கள் அமெரிக்காவில் வசித்தால், அவர்களுக்கு தண்டனை வழங்கும் சட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கையொப்பமிட்டுள்ளார். இதன் காரணமாக, இலங்கை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கலிபோர்னியாவிலுள்ள தன் வீட்டுக்கு இனி செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கனடா, போர்க் குற்றம் புரிந்தோருக்கு ஏற்கனவே தடை விதித்தது. தற்போது அமெரிக்காவிலும் இந்தச் சட்டம் அமுலுக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விற்பனைக்கு வந்த அமெரிக்கத் தீவு



மத்திய அமெரிக்காவின் நிகராகுவா பகுதியில் அமைந்துள்ள தீவு ஒன்று ரூ. 3.7 கோடிக்கு (இந்திய ரூபாப்படி) விற்பனைக்கு வந்துள்ளதாக தகவல். இதே விலையில் இந்தியாவின் மும்பை அல்லது டில்லி போன்ற நகரில் அப்பார்ட்மெண்ட் வாங்கலாம் எனத் தெரிகிறது.

நிகராகுவாவின் ப்ளூ ஃபீல்ட் கடற்கரையிலிருந்து சுமார் 19.5 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள 'தி இகுவானா தீவு'தான் தற்போது விற்பனைக்கு வந்துள்ளது. இதை தீவுகளை விற்பனைசெய்யும் நிறுவனமொன்று அதன் இணையதளத்தில் வெளியிட்டுள்ளது.

5 ஏக்கர் பரப்பளவுகொண்ட இந்தத் தீவில், மூன்று படுக்கையறைகள், இரண்டு குளியலறைகள்கொண்ட வீடு இடம்பெற்றுள்ளதாம். நீச்சல் குளம் அமைக்கும் வசதியும் உள்ளதாம். சுற்றிலும் தென்னை மற்றும் வாழை மரங்களும் சூழ்ந்துள்ளதாம்.

அனைத்து திசைகளிலும் நீலம் - பச்சை நிறத்திலான தெளிந்த நீர் சூழ்ந்திருப்பது பார்க்கவே ரம்மியமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் சூரிய உதயம் மற்றும் சூரிய அஸ்தமனத்தைப் பார்க்கவும், இரவுநேர காட்சிகளும் வியக்கச் செய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையப்பாவுக்கு ரசிகர் மன்றம் - வட்ஸ்அப் குருப்



கேரளாவின் இடுக்கி மாவட்டம் மூணாறு பகுதியிலுள்ள மாட்டுப்பெட்டி, குண்டலா உட்பட சில பகுதிகளில் ஒரு காட்டு யானை புகுந்து ஊர் மக்களை அடிக்கடி அச்சுறுத்தி வந்தபோதிலும் நாளடைவில் அந்த யானை மீது அப்பகுதி மக்களுக்கு பாசம் ஏற்பட்டுள்ளது. அந்த யானைக்கு 'படையப்பா' என்று பெயரையும் சூட்டினர். இப்போது ஒரு படி மேலே போய் 'படையப்பா' யானைக்கு ரசிகர் மன்றமும் வந்துவிட்டது. ஒரு வட்ஸ்அப் குரூப்பையும் ஏற்படுத்தியுள்ளனர்.

இந்த குரூப்பில் படையப்பா யானை எங்கெங்கு செல்கிறது என்பது குறித்த விவரங்களையும், அதன் புகைப்படம் மற்றும் வீடியோக்களையும் பகிர்ந்து வருகின்றனர். இதற்கிடையே நேற்றும் இந்த 'படையப்பா' யானை ஊருக்குள் வந்து அட்டகாசம் செய்துவிட்டு திரும்பிச் சென்றுள்ளது.

மைனஸ் 50 டிகிரியில் உறைந்த ரஷ்ய நகரம்



பூமியின் அதிக குளிரான நகரமாக ரஷ்யாவின் யாகுட்ஸ்க் நகரம் கண்டறியப்பட்டுள்ளது. இங்கு, தற்போது, மைனஸ் 50 டிகிரி செல்ஷியஸ் வெப்பநிலை நிலவுகிறது.

ரஷ்யாவின் மொஸ்கோ நகரிலிருந்து 5,000 கிலோமீற்றர் தொலைவில் யாகுட்ஸ்க் என்ற நகரம் உள்ளது. ரஷ்யாவே அதிக குளிர் பிரதேச நாடாக அறியப்பட்டாலும், யாகுட்ஸ்க் நகரத்தில் அதிகபட்ச குளிர் நிலவுகிறது.

இங்கு, வெப்பநிலை பூஜ்யத்தை தொடுவதெல்லாம் சர்வசாதாரண நிகழ்வென அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

குளிருடன் வாழப் பழகிவிட்டதால், அதை சமாளிக்கும் உத்திகளை அவர்கள் நன்கு அறிந்துவைத்துள்ளனர். இங்கு, ஜனவரி மாதம் கடுங்குளிர் நிலவும். அதிலும், மைனஸ் 40 டிகிரி செல்ஷியஸ் வரை வெப்பநிலை இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது. இதை சமாளிக்கும் அளவுக்கு மக்கள் பழகி விட்டனர். ஆனால், தற்போது நிலைமை மேலும் மோசமடைந்து, வெப்பநிலை, மைனஸ் 50 டிகிரி செல்ஷியஸ் ஆக குறைந்துள்ளது. ஆனாலும், மக்கள் பல்வேறு அடுக்குகளாக ஆடைகள், கையுறைகள், தொப்பிகள் அணிந்தபடி தங்கள் இயல்பு வாழ்க்கையை தொடர்கின்றனர். இந்நிலையில், பூமியின் கடுங்குளிரில் உறையும் நகரமாக யாகுட்ஸ்க் அடையாளம் காணப்பட்டுள்ளது.

திருடிய குற்றத்திற்காக நால்வரின் கைகள் துண்டிப்பு

கொடூரத் தண்டனையை நிறைவேற்றிய தலிபான்கள்

ஆப்கானிஸ்தானில் திருட்டில் ஈடுபட்ட குற்றவாளிகள் 4 பேரின் கைகளை தலிபான்கள் பொதுமக்கள் முன்னிலையில் துண்டித்த கொடூரம் நடந்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021 ஓகஸ்ட் முதல் தலிபான்கள் ஆட்சி நடைபெற்று வருகிறது. 1990களில் இருந்ததுபோல் எங்கள் ஆட்சி இருக்காது என்று தலிபான்கள் அறிவித்தாலும் அங்கு எதுவும் மாறவில்லை. பெண் கல்விக்குத் தடை, பெண்கள் வேலை பார்க்கத் தடை, ஆண்கள் ஸ்டைலாக தலைமுடி வெட்டிக்கொள்ளத் தடை. தாடியை எடுத்தால் தண்டனை. இசை, சினிமா, கேளிக்கைக்குத் தடை. பெண்கள் ஆண் துணை இல்லாமல் வெளியே வந்தால் தண்டனை. பெண்கள் முழுமையாக உடலையும் முகத்தையும் மறைக்கும் நீல நிற புர்கா அணியாவிட்டால் தண்டனை என பழைய மாதிரியே தண்டனைகளை கட்டுப்பாடுகளை கட்டவிழ்த்துள்ளது தலிபான் அரசு.

ஆப்கானிஸ்தான் மிகப்பெரிய மனிதாபிமான நெருக்கடியைச் சந்தித்துள்ளது. வேலையின்மை, பசி, பட்டினி, நோய், குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் தவிப்பு, தொற்று நோய் பரவல் என பல பிரச்சினைகள் அங்கு தலைவிரித்தாடுகின்றன.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானின் முன்னாள் அமைச்சரின் ஆலோசகரான ஷபானா நசிமி தனது ட்விட்டர் பக்கத்தில் அதிரவைக்கும் தகவலொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், காந்தஹார் கால்பந்து மைதானத்தில் பொதுமக்கள் முன்னிலையில் திருட்டில் ஈடுபட்டு கைதான 4 பேரின் கரங்கள் துண்டிக்கப்பட்டன என்று தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் மக்களுக்கு கசையடி, கை, கால் துண்டிப்பது, உயிரை எடுப்பது போன்ற கொடூரத் தண்டனைகள் தலிபான்கள் கட்டவிழ்த்துவிடுகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச சமூகங்களின் பல்வேறு அறிவுறுத்தல்களுக்கும் மத்தியில் தலிபான்கள் இவ்வாறு நடந்துகொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பூமியில் புதையுறும் ஜோஷிமத் நகரம்: மீட்புப் பணி - தயார் நிலையில் இராணுவம்



கட்டுமானப் பணிகள் மற்றும் சீதோஷ்ண நிலை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் உத்தரகாண்டின் ஜோஷிமத் நகரம் பூமியில் புதைந்து வருகிறது.

ஜோஷிமத் நகரில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தும் நடவடிக்கையை மாநில அரசும், பாதிக்கப்பட்ட கட்டடங்களை இடிக்கும் பணியை மாநில அரசும் மேற்கொண்டு வருகின்றன. விரிசல் விழுந்த பகுதிகளை பிரதமர் அலுவலக அதிகாரிகள் குழுவினர் ஆய்வுசெய்து வருகின்றனர்.

இதனிடையே, ஜோஷிமத் பகுதிகளில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள தயார் நிலையில் இருப்பதாக இந்திய இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

உத்தரகாண்ட் மாநிலத்தில் இந்திய - சீனா எல்லையில் நிலைநிறுத்தப்பட்டுள்ள வீரர்களில் ஒரு குழுவினர் ஜோஷிமத் பகுதியில் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கான பயிற்சியை மேற்கொண்டு வருகின்றனர். உத்தரகாண்ட் மாநில நிர்வாகத்துடன் இணைந்து பேரிடரை சமாளிக்கவும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் இராணுவம் தயார் நிலையிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நியூசிலாந்திலிருந்து 145 பயணிகளுடன் ஆஸி. சென்ற விமானத்தில் இயந்திரக் கோளாறு

நியூசிலாந்திலிருந்து 145 பயணிகளுடன் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரம் நோக்கிச் சென்ற விமானத்தில் நடுவானில் இயந்திரக்கோளாறு ஏற்பட்டது.

காண்டாஸ் நிறுவனத்திற்கு சொந்தமான அந்த போயங் விமானம், டாஸ்மன் கடல் மீது பறந்தபோது அதிலிருந்த எஞ்சின்களுள் ஒன்று பழுதடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

விமானத்திலிருந்து கட்டுப்பாடு அறைக்கு உச்சபட்ச SOS எச்சரிக்கை விடுக்கப்பட்டதால், சிட்னி விமான நிலைய ஓடுபாதை அருகே 12 தீயணைப்பு வாகனங்களும், ஏராளமான அம்பியூலன்ஸ்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டன.

எவ்வித அசம்பாவிதமும் நேராமல், விமானி பத்திரமாக விமானத்தை தரையிறக்கியுள்ளார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7